Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 08 விலை ரூபா: 5 50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 20 (03 05 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 74

## மே 20இல் யாழ். மாவட்ட பாடசாலைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகள் மே மாதம் 20ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக ஆரம்பமாகின்றன என்று யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சை இம் மாதம் 18ஆம் திகதிவரை நடைபெற இருப்பதாலும், இப்பரீட்சை உத்தியோகத்தர் (8ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை பச்சநூர் அகதி முகாமில் 35 தமிழர் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் அகதிமுகாம்களில் இருந்து தமிழர் தொடர்ந்தும் கைது செய்யப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் அவர்கள் உடைமைகள் சூறையாடப்படுவதும் இடம் பெற்ற வண்ணமேயுள்ளது. இதில் சிறிலங்கா இராணுவத்தினருடன் சேர்ந்து முஸ்லிம் ஊர்காவற்படையும் ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் முப்பத்தைந்து தமிழ் பொது மக்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இருபத்திநான்காம் திகதி பச்சநூர் கிராமத்தில் இருக்கும் அகதி முகாமில் இருந்து இருபத்தைந்து தமிழ் பொதுமக்களைச் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர் கைதுசெய்யப்பட்ட இவர்களில் மூவர் மட்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கடந்த திங்களன்றும் பச்சநூர் அகதிமுகாமில் இருந்து அருளம்பலம் சிவசுப்பிரமணியம் (50 வயது எல் பி.3, மூதூர்), தம்பையா ஜெயராசா (30 வயது, எல் பி. 3, மூதூர்), தம்பையா லலிதராசா (23 வயது, எல். பி. 3, மூதூர்), ம. அருந்தவராசா (28வயது, எல பி 3, மூதூர்), வினயகமூர்த்தி (30 வயது, கிளிவெட்டி) ஆகிய ஐந்து பொதுமக்கள்இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள (8ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் இரு அதிகாரி உட்பட எட்டு இராணுவம் பலி!

(கொழும்பு)

திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் அவ்வட்டாரங்கள் தகவல் தருகையில் இறந்தவர்களில் இரண்டுபேர் அதிகாரிகள் எனவும் தெரிவித்தது. அத்தோடு பத்து இராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் இடமாற்றங்கள் அனைத்தும் ரத்து

(கொழும்பு)

ஆசிரியர்களின் இடமாற்றங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாவும் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளதாகவும், எதிர் காலத்தில் ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக ஒரு புதிய முறையைக் கடைப்பிடிக்கும் அடிப்படையிலேயே இந்த மாற்றங்கள் பின்போடப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## இலவச நிவாரணம் வழங்க உடனடியாக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு 37ஆம் இலக்க இலவச நிவாரணம் நேற்றுமுதல் வழங்கப்படுகிறது.

பழைய நிவாரண அட்டைகளை வைத்திருக்கும் தீவகப் பகுதி மக்கள் யாழ்நகரில் திறக்கப்பட்டுள்ள காரைநகர், புங்குடுதீவு, வேலணை கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிவாரணப் பொருள்களைப் பெறலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது இதே (8ஆம் பக்கம் பார்க்க)

## தீவக சங்கக் கிளைகள் தற்போது இயங்கும் இடங்கள்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கக் கிளைகள் 1, 2, 3, 4, களுக்கான தற்காலிக விற்பனை நிலையம் இல. 295/15 காங்கேசன்துறை வீதி ஒழுங்கையிலுள்ள கட்டடத்தில் இயங்கும். கிளைகள் 5, 6, 7, 8, 9, 10, 11, 12க்கான விற்பனை நிலையம் நாகேந்திரன் வீதியிலும் (கோணாந்தோட்டம்) 13, 14 கிளைகளுக்கான விற்பனை நிலையம் இல. 29 மானிப்பாய் வீதியிலும் இயங்கும்.

இடம்பெயர்ந்த வேலணை வாசிகளுக்கான 37ஆம் கட்ட உலர் உணவு நிவாரணப் பொருள்கள் இன்றுமுதல் (8ஆம் பக்கம் பார்க்க)

## புல்லுமலை வாசி கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் கடந்த திங்கட்கிழமை ரெலோ குழுவினரும், சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து அப்பாவிப் பொதுமகன் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

புல்லுமலையைச் சேர்ந்த திருமல் என்பவரே பத்தாயிரம் ரூபாவுடன் பொருள்கள் (8ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### பாலகுமார்

கடந்த புதன்கிழமை மகிழூரில் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் பாலகுமார் குணரத்தினம் கிரிதரன், பெரியகல்லாறு, 2ஆம் குறிச்சி, என்றபோராளி வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## ஆனையிறவில் பலத்த விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

மே தினத்தன்று காலை 9 மணிதொடக்கம் 11-30 மணி வரை ஆனையிறவுப் பகுதியில் விமானங்கள் குண்டுவீச்சு நடத்தின.

மேதினத்தன்று காலை மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்கான ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (49)

## மேதினத்தன்று மணலாறில் பரவலான குண்டுவீச்சு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிறிலங்கா விமானப்படையினர் பொது மக்களின் குடியிருப்புக்கள்மீது குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

மேதினத்தன்று காலை 8.30 மணிமுதல் இரவு 10 மணி வரை ஆண்டான்குளம், கருநாட்டாங்கேணி, நாயாறு, செம்மலை. அளம்பில், குமுழமுனை, தங்கபுரம், தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான குண்டுத் (8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று காலை புலிகள் இராணுவம் மோதல்

(வவுனியா)

பூந்தோட்டம், தாண்டிக்குளம் ஆகிய இராணுவமுகாம்களிலிருந்து இரு பிரிவுகளாக வெளியேறிவந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 8-30 மணியளவில் பொதுமக்களை கேடயமாக முன்னால்விட்டு சாந்தசோலை என்னும் இடத்தால் இராணுவத்தினர் முன்னேறி வந்தசமயம் பேயாடி கூழாங்குளம் சந்தியில்வைத்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குத (8ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத்தீர்வு

## சாத்தியப்படாது என்பதை அனைவரும் ஏற்றுள்ளனர் - பிரேமதாஸா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வுகாண முடியாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறது. இதற்கானஅடிப்படைக் காரணம என்ன என்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம் என்று கொழும்பு காலிமுகத்திடலில் ஐ. தே. க ஆதரவில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பேசும்போது ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தெரிவித்தார்.

அரசியல் ரீதியான பேதங்கள் யாவற்றிற்கும் மேலாகச் சென்று மனிதகுலம் முழுவதையும் ஒரு கொடியின் கீழ் ஐக்கியப்படுத்திய பெருமை பாட்டாளி வர்க்கத்தைச் சாரும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## 28 ஆசிரியர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற வேறு மாவட்டத்தில் சேவையில் இருந்த 28 ஆசிரியர்கள் நேற்று முன்தினம்முதல் யாழ். மாவட்டத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் 105 இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆசிரியர்களின் சேவைகள் மாவட்டத்திற்குள் மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதோடு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளும் அமுலில் இருக்கும் என்று யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (க)

## மூதாட்டி சுட்டுக்கொலை

(ஈச்சமோட்டை)

கரம்பன் மேற்கைச்சேர்ந்த மூதாட்டி ஒருவர் சரவணையில் பாதுகாப்பு கருதி வந்து தஞ்சமடைந்தபோது சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி மரணமானார். இறந்தநா நாகரத்தினம்என்னும்இவ் வயோதிபரின் சடலத்திற்கு என்ன நடந்தது பற்றி தெரியவில்லையென மேற்படி மூதாட்டியின் உறவினர்கள் தெரிவித்தனர். (43)

## மேற்கத்தைய உணவுகளில் பெரும்பாலானவை அழுகியவை

(தெகிரான்)

''மேற்கத்தேச நாடுகளால் வழங்கப்பட்ட உணவுகளில் பெரும்பாலானவை அழுகிப்போன பழுதாகிய உணவே இருந்தது'' எனஈரானில்உள்ள குர்திஷ் இனமக்கள் புகார் செய்துள்ளனர்.

அத்துடன் இவர்களால் அனுப்பப்பட்ட துணிவகைகள் மற்றும் உடுப்புகள் உபயோகத்திற்கே பயனற்றவை எனத் தெரிவித்துள்ள அதே நேரம், (8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

விளக்கெரிக்க, மருத்துவ தேவைக்கு பயிர்ப் பீடைகளை அழித்து விலக்க வேப்பெண்ணெய் சுத்தமானது அரைப் போத்தல் ரூபா 45/ மட்டுமே! (போத்தலுடன்) மில்க்வைற் யாழ்ப்பாணம். (B/2450)

**முதலாவது நூல்**

இலங்கை வானொலி தமிழ்ச் சேவைநாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுப்புக்கள் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 25/- முதலாம்பிள்ளை 30/- நகைச்சுவை நிறைந்த 19 நாடகங்கள். (R/1366)


## திருநாவுக்கரசு அணி பெயர் மாற்றம்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் எஸ் திருநாவுக்கரசு தலைமையிலான பிரிவு தனது சட்சிக்கு அண்ணா - புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகம் என்று மறுபெயர் சூட்டியுள்ளது.

## 31 ஆவது நாள் நினைவு அஞ்சலி



வீர ஜனனம் 7-9-1972

வீர மரணம் 3-4-1991

### யூட் மரியோஜ் (கண்ணன்)

விடுதலை வேட்கையில் வீறுடன் எழுந்து
முள்முடி தாங்கும் சிலுவைப் பாதையில்
திடமுடன் சென்ற தீரனே - எங்கள் புதல்வனே!
வாழ்ந்த போது ஆசிக்கப்பட்டாய் - இப்போதும்
நேசிக்கப்படுகிறாய். இனிவரும் காலம்
உன புகழ் பாடும்!

உன்பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர், உறவினர்,
நண்பர்கள்.

(R/1364)

## 45 ஆம் நாள் வீர நினைவஞ்சலி



### பேஜர் பிரதாப் செட்டி

(கந்தசாமி செல்லக்குமார்- பொன்னாலை)

வீர ஜனனம் 03 03-68 வீர மரணம் 20-03-91


மன்னார் மண் மீட்கவென
மறப்படை தனை செலுத்தி
மானத்துடன் உயிர் நீத்த
மா வீரனே!
உன் இழப்பு எமக்கு மட்டுமல்ல
தமிழருக்கே பேரிழப்பு,

உன்பிரிவால் வாடும்
பெற்றோர், உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

(B-1730)


## நலமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி "ஷப்றா"

**உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்!**




கடந்த நான்கு ஆண்டுகளுக்கான நிதி நிலை விபரம்

| | 1986/87 ரூபா 000 | 1987/88 ரூபா 000 | 1988/89 ரூபா 000 | 1989/90 ரூபா 000 |
|---|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11, 320 | 14, 355 | 23, 207 | 23, 636 |
| பொது மக்கள் வைப்புகள் | 100, 577 | 110, 898 | 116, 890 | 141, 748 |
| வங்கிக் கடன்கள் | 7, 718 | 6, 540 | 11, 364 | 17, 981 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16, 613 | 14. 832 | 13, 700 | 19, 488 |
| வங்கி மீதிகள் | 10, 912 | 3, 189 | 1, 894 | 2, 952 |
| மொத்தச் சொத்துகள் | 127, 176 | 143, 823 | 162, 240 | 193, 265 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19, 288 | 23, 174 | 23, 701 | 23, 434 |
| வைப்பாளருக்குச்செலுத்திய வட்டி | 16, 881 | 20, 025 | 20, 833 | 22, 351 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 2, 307 | 3, 148 | 2, 868 | 1, 083 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1. 775 | 1, 508 | 754 |

**பணிப்பாளர் சபை**

எஸ். பி. ஈ. கருணாரட்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I B. (Lond ,) முகாமைப் பணிப்பாளர்.
ஜே. டி. நவரட்ணம்,
A. I. B. (Lond )பொது முகாமையாளர்.

ஏ. எம். எச். பாரி
B. A (Hons.)
ஆர். பாலசுப்பிரமணியம்

### ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

2, ஆர். ஏ. டீ. மெல் மாவத்தை,
கொழும்பு – 4.
தொலைபேசி: 508087/90

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B-2462)




## நினைவு கூருகின்றோம்

### 1991-05-03

1988ஆம் ஆண்டு இதே தினத்தில் சந்திவெளியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**விஜி** (நல்லசேகரம் சுந்தரலிங்கம் - முறக்கொட்டாஞ்சேனை)

இதே ஆண்டு வந்தாறுமூலையில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**விக்கி** (ஐயாத்துரை பிரபாகரன் -வந்தாறுமூலை)

இதே ஆண்டு தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான மோதலின்போது காயமடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**ஜெகன்** (கோவிந்தசாமி தெய்வேந்திரன் -வல்வெட்டித்துறை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

உங்களுக்காய்
மரணத்தை மாலைகளாய்ச் சூடிநின்ற மறவரெல்லாம்
மண்ணுக்கே உரமாகி மாண்டுவிட்டார் கேளுங்கள்!
சிந்தனையில் சிறிதேனும் தெளிவாக்கப் பட்டிருப்பின்
சீதளக் காற்றை சிருஷ்டிக்கப் புறப்படுங்கள்!
சிறுத்தைகளின் கூட்டத்துள் சீராகச் சேருங்கள்!
தணியாத தாகமெனும் தமிழீழ தாயகத்தை
அணிசெய்ய வாருங்கள்! அணியாக மாறுங்கள்!!

(வளவை வளவனின் 'அணியாவீர்' எனும் கவிதையில் இருந்து)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2448)

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி



ஒடுக்கு முறையாளர்களுக்கு முதலில் முகம் கொடுப்பது பெண்களே. எனவே அவர்களுக்குத்தான் புரட்சிக்கான நிர்ப்பந்தங்கள் உண்டு. இதைவிட போராட்டங்களில் ஆண்களின் இழப்பும் உழைப்பாளர் தொகை குறைவதும் இயல்பாக போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கின்றது.


பிரதித்தலைவர்.
கோ. மகேந்திரராசா

### அனாதைகளல்ல நீங்கள்!
### நம்பிக்கை நட்சத்திரங்கள்

துயரத்திலும் சிரிக்கிறீர்களே...
வறுமையிலும் அருந்துகிறீர்களே...
அது உங்களை வாழவைக்கும்
தனியான வாழ்க்கைக்குரிய
வயதில்லை
அதற்கான தயார்ப்படுத்தலுமில்லை
ஆனாலும்
வாழ்கிறீர்கள் - நீங்கள்
நம்பிக்கையின் நட்சத்திரங்கள்
நீங்கள் எதிரிகளால்
துரத்தப்பட்டவர்கள்
தனிமைப்படுத்தப்பட்டவர்கள் - ஆனால்
கைவிடப்பட்டவர்களல்ல
அனாதைகளுமல்ல
காட்டினுள் வாழ்கிறீர்கள் - அதற்காக
கற்கால மனிதர்களல்ல -
வேடர்களுமல்ல
ஏனெனில உங்களுக்காக
உங்கள் எதிர்கால வாழ்வுக்காக
சுதந்திர தமிழீழம் காத்திருக்கிறது.
அதற்கான நிகழ்தகவு
அதிகரித்து வருகிறது.

-யேசுநேசன்






மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரமரணமடைந்த போராளிகளில் மிகக் கூடுதலானோர் ஆரையம்பதி கிராமத்தைச் சேர்ந்தவர்கள். பல்கலைக்கழக மாணவர்களில் இருந்து பாடசாலைப் பக்கமே சென்றறியாதவர்கள் வரை இவர்களில் அடங்குவர். அதனால் தானோ என்னவோ சிறிலங்கா இராணுவமாக இருந்தாலும் சரி, இந்திய இராணுவமாக இருந்தாலும் சரி அல்லது எடுபிடிக் கூட்டங்களாயிருந்தாலும் சரி இவர்களால் சோதனைக்குட்படுபவர்கள் ஆரையம்பதி அடையாள அட்டை வைத்திருந்தால் ''விசேஷமாகக் கவனிக்கப்படுவார்கள்.''

புகழ்பெற்ற கண்ணகி ஆலயம் ஒன்று இங்குண்டு. மட்டக்களப்பு வாவியை ஒரு பக்க எல்லையாகக் கொண்டுள்ள இந்தக் கிராமத்தில் கணிசமானோர் ஆற்றில்மீன்பிடித்து தமது சீவியத்தை நடத்துபவர்கள். இவர்களில் பலர் இராணுவ முற்றுகை நிகழும் சமயங்களில் தோணிமூலம் போராளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் தமது உயிரை இழந்துள்ளார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் சாத்தியமான சகல வழிகளிலுமே ஆண்களும், பெண்களும் போராளிகளைக் காப்பதில் முழு மூச்சாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

இயல்பாகவே தமிழ் உணர்வும், அநீதியை எதிர்க்கும் போர்க்குணாம்சங்களும் உள்ள இந்த மண்ணில் நடந்த பல சம்பவங்கள் வரலாற்று ஏடுகளில் இன்னும் முழுமையாகப் பதியப்படவில்லை.

ஒரு நாள் நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது. களைத்துச் சோர்ந்த ஒரு போராளி தனக்கு மிகவும் பழக்கமான ஒரு வீட்டில் நுழைகிறான். இதை வீடு என்று சொல்வதை விட கொட்டில் என்று சொல்வதே மிகப் பொருத்தம். கோழிக்கூடு போன்ற அமைப்புடைய குசினியும், இதைவிடக் கொஞ்சம் பெரியதும் உயரமுமான இன்னுமொரு குடிசை; இதுதான் அந்தக் குடும்பத்தவருக்குச் சொந்தமான இல்லம். தச்சுத் தொழில் செய்யும் அந்தக் குடும்பத் தலைவருக்குச் சொந்தமான தொழில் உபகரணங்களும், தையல்தொழில் செய்யும் குடும்பத் தலைவிக்குச் சொந்தமான ஒரு தையல் இயந்திரமும்தான் அவர்களது சொத்து. இவன் நுழைந்த சமயம் குசினிக்குள் குடும்பத் தலைவர், தலைவி, இரண்டு பெண்பிள்ளைகள், மகன் ஆகியோர் உணவருந்திக் கொண்டிருக்கின்றனர். சோற்றுப் பானையில் சோறு இல்லை. சமைத்த உணவு அனைத்துமே எல்லாத் தட்டுக்களிலும் பங்கிடப்பட்டுவிட்டது. குசினியை எட்டிப் பார்த்தபோராளியை ''வாங்க'' என அழைத்த குடும்பத் தலைவி, வீட்டினுள் ஒரு பாய்போட்டு இருத்தி விட்டு குசினிக்குள் திரும்பினாள்.

குசினிக்குள் நடப்பதைக் காணாததுபோல் கவனித்துக் கொண்டிருந்தான் போராளி. குசுகுசு சத்தம் கேட்டது. எல்லோர் தட்டிலும் கொஞ்சக் கொஞ்ச சோறும் கறியும் எடுத்த குடும்பத்தலைவி இன்னொரு தட்டில் அவற்றைப் போட்டுக்கொண்டுவந்து 'சாப்பிடுங்க' என்றாள் போராளியிடம். போராளிக்குக் கண் கலங்கியது. தான் சாப்பிடும் ஒவ்வொரு கவளமும் அந்தக் குடும்பத்தினரை குறைப்பட்டினி போட வைப்பவை என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அந்த வீடு ''அன்ரி வீடு'' என்றே அழைக்கப்படும். அது குடிசைதான் ஆனால் விடுதலை உணர்வில் கோபுரமாய் உயர்ந்து நின்ற அந்த வீட்டில் எல்லாமே அன்ரி தான். இந்த அன்ரியின் பெயர் பூரணம். ஒரு நாளில் பெரும் பகுதி நேரங்களை போராளிகள் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கே ஒதுக்கும் தன்மை அன்ரியிடம் காணப்பட்டது.

தமிழ்த் தேசிய உணர்வில் ஊறிய அவர் 1984 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் புலிகள் இயக்கத்தினரோடு அறிமுகமானார். அன்றிலிருந்து அவர் கிட்டத்தட்ட ஒரு முழுநேர உறுப்பினர் மாதிரியேதான். புலிகள் இயக்கத்தின் ஆதரவாளராக அவர் இருந்தாலும் ஏனையோருக்கும் தன்னாலியன்ற உதவிகள் செய்து வந்தார். ஏனெனில் எல்லோரும் போராளிகள் மாதிரித்தெரிந்த காலமது.

சாப்பாடு கொடுக்க வேண்டுமா? அதிரடிப்படை வருகின்றதா என்று ''சென்றி'' பார்க்க வேண்டுமா? போராளிகளின் உடுப்புக்களைத் தோய்க்க வேண்டுமா? சுகவீனமுற்றிருக்கும் போராளிகளைக் கவனிக்க வேண்டுமா? அவர்களுக்கு வெந்நீர் வைத்து குளிக்க வைக்க வேண்டுமா? எல்லாவற்றையும் தானாக இழுத்துப் போட்டுச் செய்வதில அன்ரி தனி ரகம் தான். இடையிடையே நேரம்கிடைக்கும் போது உடுப்புத் தைத்து அதில் கிடைக்கும் ஊதியத்தைப் போராளிகளின் உணவுத் தேவைக்காகப் பயன்படுத்துவார் பிள்ளைகளையும் வேலை வாங்குவார்.

> **போராளியாக இருக்கத் தவறியவர்கள் போராளிகளின் ஆலமரத்தைத் தறித்தார்கள்; அவர்கள் ஒன்றை உணரத் தவறிவிட்டார்கள். இந்த ஆலமரம் எத்தனை விழுதுகளைத் தாங்கியுள்ளது என்பதை; அந்த விழுதுகள் மரத்தின் பணியினைத் தொடரும் என்பதை.**

நாளாக நாளாக அன்ரியின் பொறுப்பு அதிகரித்தது. செய்திகளைப் பரிமாறிக் கொள்பவராக மாறிக் கொண்டார் அன்ரி. அம்பாறை, மன்னார் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று தகவல் கொடுத்து, தகவல் பெற்று வந்தார். மன்னாருக்குச் சென்று வரும் சமயம் மகளிர் படைப் பிரிவை புலிகள் ஆரம்பிக்கவிருக்கின்றார்கள் என்று தெரிந்ததும் தனது மூத்த மகளை இயக்கத்திற்குப் போக வேண்டும் என அறிவுறுத்தினார். மன்னாருக்கு மகளைக் கூட்டிச் சென்று இயக்கத்தில் இணைத்து விட்டார். அக்காலகட்டம் பெண்கள் இயக்கத்திற்குப் போவதா என்று மூக்கில் விரலை வைத்த காலம். அக்காலகட்டத்தில் இயக்கத்திற்குப் போன பெண் போராளிகளில் பெரும் பகுதியினர் ஏதோ ஒரு விதத்தில் குடும்பத்தினருக்கு ''சுத்தி விட்டு'' தான் இயக்கத்திற்கு செல்ல முடிந்தது. அப்படியான காலகட்டத்தில் தானே கூட்டிச்சென்று இணைத்த அன்ரி புரட்சித் தாயாகத் தன்னை இனங் காட்டினார்.

அடுத்து பாடசாலையில் கல்வி கற்கும் தனது மகனையும் இயக்கத்துக்கு அனுப்பி வைத்தார். ரகு என்னும் பெயரையுடைய அவன் பிரதீஸ் என பெயர் சூட்டப்பட்டு இயக்கத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தான். பயிற்சிக் காலத்தில் பிரதீஸ் கடுமையாக நோய் வாய்ப்பட்டான். போராளிகள் அவனுக்கு சிகிச்சையளித்தனர். ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. அதனால் தனியார் வைத்திய நிலையமொன்றில் சிகிச்சை பெற அவனை அனுப்பி வைத்தனர், பிரதீசுக்கு துணையாக பிரியன் என்ற போராளியையும் அனுப்பி வைத்தனர்.

9-9-85. அன்றுதான் அந்தத் துரதிஷ்ட சம்பவம் நடந்தது. இரத்தத் துடிப்பு என்பதை உணர்த்தும் சம்பவம் அது. காலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தார் அன்ரி அப்போது அங்கே ஒரு போராளி சென்றான். அப்போராளியிடம் அன்ரியின் இரண்டாவது மகள் 'தம்பியைப் பார்க்க வேணும் போல இடக்கு கூட்டிக் கொண்டந்து காட்ட 'முடியுமா?' என்றுகேட்டாள். அவ்வளவுதான் மகள் மேல் சீறிப்பாய்ந்தார் அன்ரி. ''போராடப்போறவங்களைப் பாசங் காட்டி வீட்டுக்குக் கூப்பிடக்கூடாது. இயக்கமென்டா என்ன விளையாட்டாநினைச்சியா?'' என்று கண்டித்து விட்டுச் சென்றார்.

இந்த நேரம் பிரதீஸ் பிரியனுடன் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தடியில் சென்று கொண்டிருந்தான். திடீரென்று அவர்களைச் சோதனையிட முயன்றார்கள் அதிரடிப்படையினர். ஓடினார்கள் இருவரும். ஆனால் நகரின் மத்தி அது என்பதும் பிரதீஸின் உடல்நிலையும் அவனுக்குப் பாதகமாக இருந்தது. பிரதீஸ் சயனைட்டை உட்கொண்டான். கூடியதூரம் ஓடிய பிரியனும் பிடிபடும் தருணத்தில் சயனைட்டை உட்கொண்டான். இருவரையும் ஜீப்பில் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றனர் அதிரடிப்படையினர். ஆனால் பொதுமக்களை சடலங்களைப் பார்க்க அனுமதிக்கவில்லை அதிரடிப்படையினர். தூரத்தில் நின்று அவர்களின் கால்களை மட்டுமே பார்க்க முடிந்தது அன்ரியால். வீட்டுக்குவந்த அன்ரி 'செத்த புலிகளைப் பார்க்கக் கூட விடறாங்களில்லையே'' என்று அதிரடிப் படையினரைத் திட்டிக்கொண்டிருந்தார் அப்போதெல்லாம் அன்ரிக்குத் தெரியாது அவர்களில் ஒருவன் தனது மகன் தான் என்பது.

சயனைட் உட்கொண்டவர்களில் ஒருவர் அன்ரியின் மகன் என்பது உறுதியானது ஊரார் வீட்டுப் பிள்ளைகளுக்காக ஓலம் எழும் அந்த வீட்டில் சொந்தப் பிள்ளைக்கும் ஓலம்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பாற்கஞ்சி

"ராமு, என் ராசவன்னா குடிச்சுப்போடுவாய். எங்கே நான் கண்ணை மூடிக்கொள்கிறேன். குடிச்சுப் பார்க்கலாம். நாளைக்குப் பாற்கஞ்சி ..."

"சும்மாப்போம்மா நாளைக்கு நாளைக்கென்று எத்தனை நாளா ஏச்சுப்பிட்டாய். எனை தான் சொல்லேல். கூழ் குடிக்க மாட்டேம்மா."

"இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முதிர்ந்து விளைஞ்சு வருது ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே"

"கூழைப் பார்த்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னா முடியாது" என்று சொல்லி அழத்தொடங்கினான்.

"அப்பா பசியோட காத்துண்டிருப்பாரடா வயல்லே கூழ் கொண்டு போகணும். என்ன பாடுபட்டும் நாளைக்குக் கஞ்சி தந்துடுறனே ஆம்... என் கண்ணோலியோ?"

"நிச்சயமாய்ச் சொல்றயாம்மா? நாளைக்குப் பாற் கஞ்சி தருவாயா?..."

சட்டென்று பக்கத்திலிருந்து சிறுவர்கள் கம்பனப் பூச்சி பிடித்து விளையாடும் சப்தம் கேட்டது. அவசர அவசரமாய்ப் பத்து வாய் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடினான்.

அந்தக்கிராமத்தில் முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் நிலங்களில் ஒன்று! அதற்குப் பக்கத்திலே குளம். குளத்தைச் சுற்றிப் பிரமாண்டமான மருத மரங்கள். தூரத்திலே அம்பிகையின் கோயிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலிபோட்டாற்போல் தூங்கிக்கிடந்தன குடி மனைகள்.

மார்கழி கழிந்துவிட்டது. இப்பொழுது மேகத்திலே புகார் ஓடுவதில்லை, ஞான அருள் பெற்ற நாள் வெண்ணிறம் பெற்று வந்தது ஆம் தைமாதம் பிறந்து துரிதமாய் நடந்து கொண்டிருந்தது.

மாரிகாலம் முழுதும் ஒய்ந்து தூங்கிக்கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கி விட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்துகொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூரிய ஒளி வெள்ளம் பாயவே, அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலிந்து இறுகியிருந்த நரம்புகள் வில் போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுழற்றித் தன்வயலைப் பார்த்தான், நெற்கதிர்கள் பால்வற்றி, பசுமையும், மஞ்சளும் கலந்து செங்காயமாக மாறிக் கொண்டிருந்தன 'இன்னும் பதினைந்து நாட்களில்'' என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது

முருகேசன் மனத்திலே ஒரு பூரிப்பு, ஓர் ஆறுதல், ஒரு மன அமைதி அவன் ஒரு வருஷமாய்ப் பாடுபட்டது வீண் போகவில்லையல்லவா? ஆனால் அவற்றுக்கிடையில் காரணமில்லாமல் "சிலவேளை ஏதேனும்... யார் கண்டார்கள்!" என்ற இன்பமும் துன்பமும் கலந்த ஒரு மன ஏக்கம்...!

முருகேசனுக்கு வயலை விட்டுப்போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிரைக்கும் தன் கைகளால் அணைத்து தன் குழந்தைகள் போலத் தழுவிக்கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக் கொண்டிருந்த அந்த வெயிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுதுதான் வந்தாள். கூழ் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது முருகேசன் அவளைப் பார்த்து, "போனவருசந்தான் மழை இல்லாமல் எல்லாம் சப்பையும், சாவியுமாய்ப் போயிருத்து. காமு, அதோ பார் இந்த வருஷம் கடவுள் கண்திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துப்புடலாம் நமக்கு ஒரு வருடத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்கராமனுக்கு ஒரு சோடி காப்பு வாங்கணும்..."

"எனக்கு ஒட்டியாணம்"

"ஏன், ஒரு கூறைச்சேலையும் நன்னாயிருக்குமே"

"ஆமாங்க, எனக்குந்தான் கூறைச் சேலை, அப்படின்னா ஒங்களுக்கு ஒரு சரிகை போட்ட தலப்பா வேணுமே"

"அச்சா, திரும்பவும் புது மாப்பிள்ளை பொம்புளையாட்டம் ரெண்டு பேரும் - ஓ - ஓரே சோக்குத்தான்" என்று சொல்லி அவளைப் பார்த்து இளித்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சேலைத் தலைப்பால் முகத்தை அரைகுறையாய் மூடிக்கொண்டு "அதெல்லாம் இருக்கட்டும் எப்போ அறுவடைக்கு நாள் வைக்கப்போறீங்க" என்றாள்

"இன்னிக்குச் சனிக்கிழமை சனியோடு சனி எட்டு மற்றச் சனிபதினைந்து ஆம் நாள் நல்ல நாள். அதே சனிக்கிழமை வைத்திடுவமே"

"தாயே, இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப் படாது" என்று மனதில் சொல்லிக்கொண்டாள் காமாட்சி.

## சிறுகதை

ஒரு பொன்னாளை எதிர்பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள். காமாட்சி தன் வீட்டிலுள்ள களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைத்திருந்தாள். லக்ஷ்மி உறையப் போகும் அந்த அறைக்கு ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றி வந்தாள். மணையாகக் கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்டடையிற் கொண்டு போய்த் தேய்த்து வந்தான் முருகேசன் கதிர்ப்பாய்களை வெய்யிலிலே உலர்த்தி, பொத்தல்களைப் பனை ஓலை போட்டு இழைத்து வைத்தான். ஐந்தாறு நாட்களுக்கு முன்னரே அயல்வீட்டுக் கந்தையனிடமும் கோவிந்தனிடமும் "அறுவடைக்கு வந்திடவேணும் அண்ணமரே" என்று பல முறை சொல்லி வந்தான். இருவருடைய மனதிலும் ஓர் ஆவல் துடித்துநின்று இவற்றை எல்லாம் செய்து வந்தது.

அறுவடை நாளுக்கு முதல் நாள் அன்று வெள்ளிக்கிழமை பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகைதான் இருந்தது. நிஜஸ்வரூபமாய் இருந்த வானத்திலே திடீரென்று ஒரு கருமுகிற் கூட்டம் கூடியது. வரவரக் கறுத்துத் தென்திசை இருண்டு வந்தது அந்த மேகங்கள் ஒன்று கூடி அவனுக்கு எதிராக சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனதிலும் இருள் குடிகொண்டது. காமாட்சி அவள் மனதிற்குள் அம்பிகைக்கு நூறு வாளி தண்ணீரில் அபிஷேகஞ் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். சிறுநேரத்தில் ஒரு காற்று அடித்தது. கூடியிருந்த முகிற்கூட்டம் கலைந்து சிறிது சிறிதாய் வானம் வெளுத்துக் கொண்டு வரவே, முன்போல் ஆகாயம் தெளிவுடன் விளங்கிற்று. தன்னுடைய பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டு விட்டதென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப்போகமுன் அன்றைக்குப் பத்தாவது முறை கந்தையனுக்கும் கோவிந்தனுக்கும் காலையில் அறுவடையைப் பற்றி நினைப்பூட்டிவிட்டு வந்து படுத்துக் கொண்டான். அவன் நித்திரைக்குப் போனபொழுது நேரமாகிவிட்டது. அவன் படுக்கையிலேயே புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். நித்திரை அவனுக்குஎப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்பிற்கும் தூக்கத்திற்கும்இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆயிரஞ் சிந்தனைகள் பிசாசுகளைப் போல்வந்து அவன் மனதிலே ஓடிக்கொண்டிருந்தன.

அவன் வயலிலே நெல் அறுத்துக்கொண்டிருக்கிறான். பக்கத்திலே கோவிந்தனும் கந்தையனும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அறுத்து வைத்ததைக் காமாட்சியும், பொன்னியும், சின்னம்மாவும் கட்டுக்கட்டாய் அடுக்கிக் கொண்டிருக்கிறார்கள். கிளிகளையும், காக்கைகளையும் துரத்திக்கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி; "பள்ளத்துப் பள்ளன் எங்கேடி போயிட்டான்" என்று பள்ளுப்பாடத் தொடங்கினாள்.

## சி. வைத்தியலிங்கம்

அதற்கு பொன்னி "பள்ளன்பள்ளம்பார்த்து பயிர்செய்யப் போயிட்டான்!" என்று சொல்ல, காமு, "கொத்தும் கொண்டு கொடுவாளுங் கொண்டு..." என்று இரண்டாம் அடியைத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி "கோழி கூவலும, மண்வெட்டி கொண்டு" என்று சொல்ல, இருவரும் சேர்ந்து "பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்!" என்று முடித்தார்கள்.

உடனே காமு, "ஆளும் கூழை அரிவாளும்கூழை" என்று சொன்னதும், முருகேசன் 'யாரடி கூழை!' என்று அரைத் தூக்கத்திலிருந்து கத்திக் கொண்டு எழுந்திருந்தான்.

முருகேசன் - ஆள் கூழை. பாவம், தன்னையே அவள் கேலி செய்வதாக நினைத்து அப்படிக் கோபித்துக்கொண்டான். இப்பொழுது நித்திரை வெறி முறிந்ததும், தான்செய்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாயிருந்தது. தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டு திரும்பவும் படுத்துக்கொண்டான். அந்தக் கனவுதான் எவ்வளவு அழகான கனவு! அதன் மீதியையும் காணவேண்டும் என்று அவனுக்கு ஆவலாயிருந்தது. ஆனால் நித்திரை எப்படி வரப்போகிறது? கனவுதான் மீண்டும் காணப்போகிறானா? தன் கற்பனையிலே மீதியைச் சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை சென்று கொண்டிருக்கிறது. வயலிலே நின்று கொண்டு நெல்மூடைகளை வண்டியிலே போடுகிறான். வண்டி வீட்டு வாசலிலே வந்து நிற்கிறது.

> 'ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு வழி காட்டிய முதலவர் என்கிற பெருமையைச் சம்பாதித்திருப்பவர் சி. வைத்தியலிங்கம் அவர்களே. கதையின் கருவுக்கேற்ற பகைப்புலத்தினை வீச்சுடனும் வளத்துடனும் அமைத்து, கலைத்துவம் ததும்பும் அருமையான சிறுகதைகளை எழுதியிருக்கின்றார். எண்ணிக்கையைப் பொறுத்த மட்டில் இருபத்தைந்து சிறுகதைகளைத்தானும் எழுதாத இந்தச் சிறுகதைச் சிற்பியை இன்றுங்கூட எழுத்துலகம் போற்றுகின்றதென்றால், இவரது கதைகளின் வலிமைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை. மூன்றாம் பிறை, கங்காகீதம் என்பன முறையே தமிழ்நாட்டு, ஈழநாட்டுச் சிறுகதைத் தொகுதிகளில் இடம் பெற்றிருக்கின்றன, இவற்றுடன் பாற்கஞ்சி, நெடுவழி ஆகிய கதைகளும் வாழக்கூடிய வளம் மிக்கவை'
>
> -இரசிகமணி. கனகசெந்திநாதன்-

அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூரணமாய் விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து அவனை...

அப்பொழுது வீட்டுக்கூரைக்கு மேலிருந்து ஒரு சேவல் கூவிற்று. முருகேசனுடைய கற்பனை அறுந்துவிட்டது. அக்கிராமத்திலுள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூவிக்கொண்டுவந்தன. அவன் வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி "மேய் மேய்" என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன்மேல் படவே மீண்டும் குளிர்ந்தது. முருகேசன் பரபரவென்று எழுந்திருந்தான். வாசலைஅடைந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்கு போனபொழுது வானத்திலே பூத்திருந்த நட்சத்திரங்கள் ஒன்றையும் காணவில்லை. வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக்கொண்டிருப்பது போல் தோன்றிற்று. வீட்டு முற்றத்திலே வந்து நின்றான். ஒரு மழைத்துளி அவன் தலைமேல் விழுந்தது கையை நீட்டினான். இன்னும் ஒரு துளி! மற்றக் கையையும் நீட்டினான். இரு துளிகள் வீழ்ந்தன அவன் தலையிலே வானமே இடிந்துவிழும்போல் இருந்தது.

உக்கிப்போய்த் தன் வீட்டுத் திண்ணையிலே அவன் குந்திக்கொண்டான். பொலுபொலுவென்று மழை தொடங்கியது. இடி இடித்தது மின்னி மழையானது சோனாவாரியாய்க் கொட்டிக் கொண்டிருந்தது.

காலை ஏழு மணியாகியும் மழை விடவேயில்லை. ராமு ஓடி வந்து தந்தைக்குப்பக்கத்திலே குளிர் காய்ந்து கொண்டிருந்தான். காமாட்சி இடிந்து போய் நின்றாள். மழையுடன் காற்றும் கலந்து "ஹோ" வென்று இரைந்துகொண்டிருந்தது.

"அம்மா இன்னைக்கு பாற்சஞ்சி தாராதாய்ச் சொன்னியே பொய்யாம்மா சொன்னாய்?" என்று தாயைப்பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக் குழந்தையை எத்தனை நாட்களாய் ஏமாற்றிவிட்டாள்? மழையையும் பாராமல் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள். கால்படி அரிசி கடனாய் வாங்கிக் கொண்டு வந்தாள்.

(7ஆம் பக்கம் பார்க்க)



## அகதிகள்

கவிதை

எங்கள் மண்ணில்
வாழ்வதற்குப் பயந்து
அன்னிய தேசம்
போனவர்களே!
நீங்கள் வரும்
போது...
எங்கள் மண்ணில்
ஒரு விடிவுப் பாதை
திறந்திருக்கும்!
சந்தி சந்தியாக
நினைவுச் சின்னங்கள்
எழுப்பப்பட்டு இருக்கும்!
எல்லாப் புறத்து
வீரர்களாக எங்கள்
சகோதரர்கள் நிற்பார்கள்!
ஏன்? நீங்கள்
வரும் போது
உங்களுக்காகவே
இங்கேயும் அகதி
முகாம்கள் கட்டப்பட்டு
இருக்கும். ஏனெனில்
நீங்கள் இந்நாட்டு
நிரந்தர அகதிகள்.

சரவணையூர்- வி. எஸ். அகிலேஸ்வரன்

# "நீரிழிவு (டயபிற்றீஸ்)" வியாதிக்குரிய காரணிகளும் அறிகுறிகளும் தடுப்பதற்குரிய சில ஆலோசனைகளும்

## மருத்துவப் பகுதி

**'டயபீற்றீஸ்' என்றால் என்ன?**

மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு 'சக்தி' அவசியம். இச்சக்தியை இரத்தத்திலுள்ள 'குளுக்கோசு' வழங்குகிறது. சாதாரணமாக ஒவ்வொரு 100 மில்லிலீற்றர் இரத்தத்திலும் 80 தொடக்கம் 180 மில்லிகிராம் வரை 'குளுக்கோசு' இருக்கும். இதனளவு குறைந்தால், தலையைச்சுற்றி ஒருவித மயக்க நிலை (Unconciousness) ஏற்படும். இதனளவு இரத்தத்தில் கூடினால், டயபிற்றீஸ்" எனப்படும்.

**இதற்குக் காரணம் என்ன?**

உடலிலுள்ள 'சதையி' (Pancreas) என்கிற உறுப்பிலிருந்து 'இன்சுலின்' (Insulin) என்கிற ஹோமோன் (Hormone) சுரக்கப்படுகின்றது. இதுவே இரத்தத்திலுள்ள 'குளுக்கோசின்' அளவைக் கட்டுப்படுத்துகின்றது. எனவே அடிப்படையில் 'இன்சுலின்' பற்றாக்குறையினால் இரத்தத்தில் 'குளுக்கோஸின்' அளவு அதிகரித்து 'டயபிற்றீஸ்' (Diabetes) ஏற்படுகின்றது.

**'இன்சுலின்' பற்றாக்குறை ஏற்படக்காரணமென்ன?**

'டயபிற்றீஸ்' ஒரு பரம்பரைக்குரிய வியாதி என்பதால் ஏற்கனவே இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் பெற்றோர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு இந்நோய் ஏற்படும் ஆபத்து மற்றவர்களை விடச் சற்று அதிகமாகவே இருக்கின்றது. அதாவது தாய் அல்லது தகப்பனுக்கு மட்டுமிருந்தால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு 'டயபிற்றீஸ்' ஏற்படும் ஆபத்து 12.5 சதவீதம் அதிகரித்துக் காணப்படுகிறது. இருவருக்குமே இருந்தால் ஆபத்து 25 சதவீதமாகிறது. மேலும் கூவைக்கட்டை (Mumps) ஏற்படுத்தும் ஒருவித வைரசு, உடலில் சுரக்கப்படுகின்ற வேறு சில ஹோமோன்கள் போன்றவற்றாலும் வயது வந்தவர்களில் அதிகளவில் சாராயம் குடிப்பதனால் சதையியில் ஏற்படும் தாக்கம், சதையிப் புற்றுநோய், சதையில் காயமேற்பட்டு சத்திரசிகிச்சை மூலம் அகற்றல் (Pancratectomy) போன்ற காரணங்களால் 'டயபிற்றீஸ்' ஏற்படும்

**'டயபீற்றீஸில்' இரண்டு வகை உண்டு.**

சிறுபிள்ளைகளில் ஏற்படுகிற 'டயபிற்றீஸை 'இன்சுலின் டிப்பெண்டன் டயபிற்றீஸ்' என்பார்கள், (Insulin Dependent) அதாவது இவர்களுக்கு 'இன்சுலின்' கட்டாயமாக ஊசிமூலம் நாள்தோறும் போடப்படல் வேண்டும். இதற்கு பரம்பரையே முக்கிய காரணமாகும் (Genetic Factors) இரண்டாவது வகை 'டயபிற்றீஸ்' வயது வந்தவர்களில் ஏற்படுவதாகும். இதனை 'இன்சுலின் நொன்டிப்பென்டன் டயபிற்றீஸ்'' (Insulin Non Dependent) என்பார்கள். அதாவது, இவர்களுக்கு 'இன்சுலின்' கட்டாயமாகக் கொடுக்கப்படாமலேயே உணவில் கட்டுப் பாட்டையும், உடல் நிறையைக் கட்டுப்படுத்துவதாலும் நோயினளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். அதிகளவில், சீனி, சர்க்கரை, பனங்கட்டி, இனிப்பு, சொக்லேட், போன்றவைவை அடிக்கடி உண்பதாலும், அளவுக்கதிகமான உணவு உண்டு உடல்நிறையில் கூடியவர்களுக்குமே இவ்வியாதி ஏற்படும்.

**நோய்க்குரிய அறிகுறிகள்**

இவ்வியாதி ஏற்பட்டவர்களுக்கு, அடிக்கடி அதிகளவில் சிறுநீர் கழிக்க நேரிடும். அதிகளவு தாகம் ஏற்படும். பசி அதிகரித்து, போதுமானளவு அல்லது அளவுக்கதிகமாக சாப்பிட்டாலும், உடல் இளைக்கும். நிறை குறையும். இப்படியான அறிகுறிகள் தென்படுபவர்கள், அதுவும் குறிப்பாக பரம்பரையில 'டயபிற்றீஸ்' வியாதியுள்ளவர்கள், தங்களுடைய வயதுக்கும் உயரத்திற்கும் கூடிய உடல் நிறையை உடையவர்கள், தங்களது சிறுநீரையும் இரத்தத்தையும் அண்மையிலுள்ள வைத்தியசாலையில் பரிசோதித்துப் பார்த்தால் 'டயபிற்றீஸ்' வியாதி இருக்கிறதா இல்லையா என்பது புரியும்.

**பிரச்சினைகளும் ஆபத்துக்களும் (Complications)**

'டயபிற்றீஸ்' வியாதி ஏற்பட்டுவிட்டால், முற்றாகக் குணமாக்க முடியாது. ஆனால் கட்டுப்பாட்டிற்குள் (Control) வைத்திருக்கலாம். இவ்வியாதியினால், உடலின முக்கிய உறுப்புக்களிலுள்ள, குறிப்பாக கண், இருதயம், சிறுநீரகம், கால்கள் என்பனவற்றிலுள்ள சிறிய இரத்தக் குழாய்கள் படிப்படியாகப் பாதிக்கப்படுவதால், நாளடைவில், கண்பார்வை குன்றி குருட்டுத்தன்மை ஏற்படுதல் (Diabetic Retinopathy), இருதயத்திலுள்ள, கொரனரி நாடிக் குழாய்கள் பாதிக்கப்பட்டு மாரடைப்பு ஏற்படுதல், சிறுநீரகத்திலுள்ள சிறு இரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதால், சிறுநீரகத்தின் தொழிற்பாடு பாதிக்கப்படுதல் (Diabetic Nephropathy) என்பன ஏற்பட்டு உயிராபத்து ஏற்படும். மேலும் உயர் இரத்த அழுத்தம (Hypertension) உடலில் கொழுப்பு அதிகமாகப்படிதல் (Hyper Lipidaemia) போன்ற வியாதிகளும் ஏற்படும். உடலிலுள்ள நரம்புத் தொகுதி பாதிக்கப்படுவதால் (Diabetic Neuropathy) கால்களிலும் கைகளிலும் உணர்ச்சியற்றுப்போதல், எழுந்ததும் தலைச்சுற்றல், தோலில கடுமையான வலி, என்பன ஏற்படும். குதிக்காலில் அல்லது அடிக்காலில் ஒருவிதமான புண் (Diabetic Foot) ஏற்படும், இது ஆற மிகவும் சிரமப்படும். மேலும், 'டயபிற்றீஸ்' உள்ளவர்களுக்கு, அவசரத்திற்கு, சத்திரசிகிச்சை மேற்கொள்ள முடியாது. இதனாலும் சில வேளை உயிராபத்து ஏற்படும். 'டயபிற்றீஸுக்குரிய சிகிச்சையினால் சில வேளைகளில் ஆபத்து ஏற்படும். உதாரணமாக, 'இன்சுலின்' எடுத்தவுடன் சாப்பிடாமலிருத்தல், தவறுதலாக மேலதிகமாக (Overdose) எடுத்தல் என்பன உயிராபத்தையே தரும்.

**தடுப்பதற்குரிய சில ஆலோசனைகள்**

வயது வந்தவர்கள் மேலதிகமாக, சீனி, சர்க்கரை, இனிப்பு, சொகலேட் என்பன உண்பதை படிப்படியாக நன்கு குறைக்க வேண்டும். உயரத்திற்கேற்ற உடல் நிறையைப் பேணுவதில், அதிக கவனம்செலுத்த வேண்டும். அதாவது, ஓய்வுகிடைக்கும்போது, தோட்டம கொத்துதல், சயிக்கிள் ஓடுதல், கிடங்குகள் வெட்டுதல், ஓடுதல், விளையாடுதல் போன்ற ஏதாவதொன்றை நாளாந்தோறும் சீராகச் செய்யவேண்டும்.

டாக்டர் சீர்மாறன்

'டயபிற்றீஸ்' வியாதி ஏற்பட்டவர்கள நாள்தோறும், தமது சிறுநீரையும, மாதம் ஒருமுறையாவது இரத்தப்பரிசோதனையும் செய்து தமது நிலைப்பாட்டை (Diabetic-State) தெரிந்து கொள்ள வேண்டும். தத்தமக்குரிய டயபிற்றிக்கிளினிக்குகளுக்குத் தவறாது போவதுமட்டுமல்ல, அங்கு மருத்துவர்கள் சொல்லும் ஆலோசனைகளைக் கேட்டு கடைப்பிடிப்பதோடு மருந்து வகைகளையும் ஒழுங்காக எடுக்க வேண்டும். இன்சுலினை மண்பானையொன்றிற்குள் தண்ணீர் விட்டு நிழலான மண்ணுக்குள் புதைத்து சுற்றிவரத் தண்ணீர் ஊற்றுவதனால் ஓரளவுக்கு குளிர்ச்சியாகப் பாதுகாக்கலாம். டயபற்றீஸ் ஒரு ஆயுட்காலப் பிரச்சினை என்பதால், ஒழுங்கான ஆலோசனை பெற்று நடப்பதால் ஆரோக்கியமாக வாழலாம்.

---


# ரி-72 ரக தாங்கிகளை நிர்மூலம் செய்யவல்ல அப்ராம் 1ஏ1 தாங்கிகள்

றேகன் நிர்வாகத்தின் போது அமெரிக்க இராணுவம் தன்னைப் பலப்படுத்திக் கொண்டது இராணுவத்தின் செயல்திறனை உயர்த்தும் முயற்சியில் ஆயுதங்களும், போர்க்கருவிகளும் சிறந்தவகையில் உருவாக்கப்பட்டன. சோவியத்யூனியனின் புதிய சவால்களைச் சமாளிக்கும் வகையில் புதிய ரக அப்ராம் தாங்கி, பிறாட்லி வாகனங்கள் AH-64 ஹெலிகொப்டர்கள் அமெரிக்க இராணுவத்தில் இடம்பெற்றன. அதன் விளைவாக, அமெரிக்க இராணுவம உலகின் சிறந்த இராணுவமாக இன்று இடம்பெற்றிருக்கிறது.

பாரசீக வளைகுடா யுத்தத்தின்போது அப்ராம் M-1A1 தாங்கியும் பயன்படுத்தப்பட்டது. இது அரைகுறையாகவே வளைகுடாப் போரில் அவசர முக்கியத்துவ இராணுவத் தேவைக்காகவே பயனபடுத்தப்பட்டது எனவே அப்ராம் M-1A1 தாங்கியின் நம்பகத் தன்மை பரிபூரணமாக இன்று வரை நிரூபணமாகவில்லை. மிகக் குறுகியதும், கடுமையானதுமான வளைகுடா யுத்தத்தில் அப்ராம் லேசர்க்கதிர்களினால் எதிரியின் இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் தொழில் நுட்பதைப் பயன்படுத்தவில்லை போர் வாகனங்களின் தரத்தைத் தீர்மானிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட ரகத் தாங்கி பலன் கொடுக்கக்கூடியதா, அல்லது பலன் விளைவு அற்றதா என பல அதன் யுத்தகள நடவடிக்கைகளைக் கொண்டே தீர்மானிக்கின்றனர்.

போர்க்களத்தில் ஜாம்பவன் என்று போற்றப்படுவது அமெரிக்கத் தயாரிப்பான அப்ராம் M-A1 தாங்கியாகும். 55தொன் எடையுள்ள இந்தத் தாங்கிக்கு நிகர் வேறெதுவுமில்லை என்று இராணுவ வட்டாரங்களில் போற்றப்படுகின்றது. இந்த ரகத் தாங்கி கிருமி, இரசாயன அணு ஆயுதத் தாக்குதலைச் சமாளிக்கக் கூடியது. அதற்கான பாதுகாப்புக் கவசம் இந்தத் தாங்கியில் உண்டு.

"அப்ராம் M-1A1 தாங்கிகள் எக்காலத்திலும் இல்லாத உயர் தொழில்நுட்பத் தயாரிப்பாகும்" என்று லண்டன் சர்வதேச இராணுவக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த கேணல் அன்றூ டங்கன் தெரிவிக்கின்றார். எது எப்படியாயினும், இதன் செயற்பாடுகள் நம்பிக்கையூட்டுவனவாக இல்லை அப்ராம் தாங்கியை விடத் தரக்குறைவான தாங்கிகள் மிக நீண்டதூரம் ஓடக்கூடியவை அதிக எரிபொருளை அப்ராம் செலவு செய்கிறதாம். மற்றும்படி, துல்லியமான இதன் சமிக்ஞைக் கருவி இலகுவில் பழுதடையக்கூடியது. 45 மைல் ஓட்டத்துக்கு ஒருமுறை சமிக்ஞைக் கருவியைச் சரிசெய்து கொள்ள வேண்டும். ஒழுங்காக அதைப் பராமரிக்கவிட்டால் சமிக்ஞைக் கருவி செயற்படாது. இதனால் பென்டகன் கண்டனத்துக்குள்ளாகியது. இதன் பொறி உருளை (Turbine அதிகமான காற்றை உள்வாங்குவதால், பாலைவனத்தில காற்றுடன் மண்ணும் கலந்து உறிஞ்சப்படக்கூடும் இதனால் இதன் முழுமையான பயன்பாடு பாலைவனத்தில்கேள்விக்குறியாகவே உள்ளது.



சவூதி அரேபியாவில் கவிழ்ந்து கிடக்கும் அமெரிக்கத் தயாரிப்பான அப்ராம் 1ஏ1 ரக தாங்கி

சோவியத் தாங்கியான T-72-ல் 125 மி.மீ. துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன என்றாலும் அப்ராம் M-1A1 தாங்கி சோவியத் உற்பத்தியான T-72 ஐ விட முன்னேற்றமானது. அது T-72 தாக்கும் இலக்கை விட இரட்டிப்பான தூரத்து இலக்குகளைத் தாக்க வல்லது ஈராக் இராணுவத்தின் பாவனையில் உள்ள T-72 தாங்கிகள் அப்ராம் M-1A1 தாங்கிகளை ஊடுருவி அழிக்கவல்ல சக்தி வாய்ந்தவை அன்று. ஆனால் M-1A1 தாங்கிகளின் யுரேனியம்குண்டுத்தாக்குதல T72 தாங்கிகள் அணியை நிர்மூலமாக்கக் கூடியது.

> ஈராக் இராணுவத்தின பாவனையில உள்ள T-72 தாங்கிகள் அப்ராம் M-1A1 தாங்கிகளை ஊடுருவி அழிக்கவல்ல சக்தி வாய்ந்தவை அன்று. ஆனால் M-1A1 தாங்கிகளின் யுரேனியம் குண்டுத் தாக்குதல் T-72 தாங்கிகள் அணியை நிர்மூலமாக்கக் கூடியவை.

அமெரிக்காவின் வான்படை சக்தி வாய்ந்தது. ஆனால் பாரிய அளவிலான ஒரு தரை யுத்தத்தை நடத்தக் கூடிய தான வலு அமெரிக்காவிடம் இருக்கவில்லை. தரைப்படைத் தொழில் நுட்பத்திறன்களை வளர்க்க அமெரிக்கா தவறியதே இதற்கான காரணமாகும். யுத்தமுனையில் ஜாம்பவான் என்று போற்றப்படும் அப்ராம் M-1A1 தாங்கியும் தொழில்நுட்ப அடிப்படையில் பலவீனமானது. இவ்வாறான நிலையில்தான் அமெரிக்கா வான்தாக்குதலை ஈராக்கின் மீது விரிவாக்கிக் கொண்டது. சதாம் ஹுசைனின் வான் படை அமெரிக்காவின் தரைப் படையையும், அதன் கவச வாகனங்களையும் அழிக்கவல்லது என்பது தவறான மதிப்பீடாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஈராக் அதன் சண்டை விமானங்களைத் தரையிறக்கிக் கொண்டது.

- மதன் -

---

சர்வதேசப் பழங்காலக் கடிகாரக் கண்காட்சி ஒன்று சிங்கப்பூரில் நடைபெற்று வருகிறது. இந்தக் கண்காட்சியில் பிரான்சு நாட்டு முன்னாள் மன்னர் நெப்போலியனின் கடிகாரமும் இடம்பெற்றுள்ளது. இதில் ஸ்பெயின் நாட்டு அரசி உட்பட பல அரச குடும்பத்தினர் பயன்படுத்திய கடிகாரங்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# கோடரிக்காம்பின் முடிவு

"என்ன செய்யிறியள், உங்களைத்தானே! இன்றைக்குச் சமையலுக்கு விறகு ஒன்றுமில்லை. அந்த வேங்கைமரக் குத்தியைத் தறிச்சுப் பாருங்கோவன். சும்மா இருந்தால் எப்படிச் சமையலாகும்...ம்?''

குடும்பத் தலைவி இந்திராணி, செய்தித்தாளில் மூழ்கிக் கிடந்த தன் கணவன் இலங்கநாதனை விறகு தறிக்கும்படி விரட்டினாள். இலங்கநாதனும் வயிற்றுப்பாட்டு விஷயமாயிற்றே என்று மனைவியின் ஆணைப்படி கோடரியை எடுத்துத் தோளிலேபோட்டுக்கொண்டு வேங்கை மரக்குற்றி கிடந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

குடும்பத் தலைவனின் தோளில் ஏறியதும் கோடரிக் காம்புக்கு பெருமிதம் பிடிபடவில்லை. அதன் மகிழ்ச்சிக்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, குடும்பத் தலைவனின் தோளில் தாம் இடம்பிடித்துக் கொண்டது, தான் பொறாமையினால் பகைமை கொண்டிருந்த வேங்கை மரக்குற்றியைப் பிளப்பதற்குத் தானும் உறுதுணையாக இருக்கப் போவது.

வேங்கை மரக்குற்றியை அணமித்த இலங்கநாதன் கோடரியை அதன்மீது சாத்தி விட்டுத் தன் 'சாறத்தை' மடித்துக் கட்டலானான். வேங்கை மரக்குற்றியில் சாய்ந்து நின்றிருந்த கோடரிக் காம்பு வேங்கை மரக்குற்றியைப் பார்த்து, "என்ன வேங்கைமரக் குத்தியாரே உமக்குள் நீர் ஒரு பலவான், வைரம்பாய்ந்தவன் என்ற எண்ணமோ? இன்றோடை உம்முடைய கதையே முடியப் போகுது. வீட்டுக்கார ஐயாவும், கோடரி அண்ணனும், நானும் சேர்ந்து இன்று உம் உடலைச் சிதைத்து உம்மைச் சின்னா பின்னமாக்கி, அழித்து விடுகிறோம் பார்!'' – என்று கொக்கரித்தது.

வேங்கை மரக்குற்றி கோடரிக்காம்பைப் பார்த்துக் கூறியது.

"நீ என் இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தும், வீட்டுத் தலைவன் கோடரியால் என்னைப் பிளப்பதற்கு நீயும் உடந்தையாக இருக்கிறாய்; அதையிட்டுப் பெருமை வேறு படுகிறாயே; மனிதர்களிலும் கேவலமாக நடந்து கொள்கிறாயே! சீ! உனக்கு வெட்கமாக இல்லை?"

"என்ன, என்னைக் கேவலமாகவா பேசுகிறாய்? பொறு, பொறு இன்னும் சொற்ப நேரத்தில் உன் சரித்திரமே முடியப்போகுது. உன்னைச் சிதைத்து சுக்கு நூறாக்கிப் பார்த்தால்தான் என மனம் ஆறும்.'' – கோடரிக்காம்பு குளுரைத்தது.

- சமச்சு -

வேங்கை மரக்குற்றி மௌனம் சாதித்தது.

சாறத்தை மடித்துக்கட்டிய இலங்கநாதன் கோடரியை எடுத்துத் தலைக்குமேல் தூக்கினான். கோடரிக்காம்பு கோடரியைப்பார்த்துக் கூறியது.

'அண்ணை உந்த வேங்கையன்ரை திமிரை அழித்துவிட வேணும்; உவனைச் சின்னா பின்னமாக்க வேணும். நீங்க உங்களால் ஆனமட்டும் உவனை அழிக்கப்பாருங்க; நானும் என்னாலான உதவியைச் செய்கிறன்.''

"வேங்கையனை அழிப்பது கஷ்டந்தான் என்றாலும் பார்ப்பம்'' என்று கோடரி கூறவும் வேங்கை மரக்குற்றியை நோக்கிக் கோடரியை இறக்கினான் இலங்கநாதன்.

ஒன்று...இரண்டு...மூன்று... வைரம் பாய்ந்த வேங்கை மரக்குற்றியைப் பிளந்து உட்புகமுடியாத கோடரி அங்கு மிங்குமாகப் பக்கவாட்டில் அல்லாடியது. சினங்கொண்ட இலங்கநாதன் சற்றுப் பலத்தைக் கூட்டிக் கோடரியை ஓங்கிப் போட்டான். போட்ட வேகத்தில் திரும்பிய கோடரி இலங்கநாதனின் நெற்றியைப் பதம்பார்த்தது. சினங்கொண்ட அவன் தன் பலத்தனையும் சேர்த்து மீண்டும் ஒருமுறை குற்றியை நோக்கிக் கோடரியை இறக்கினான்.

இந்தமுறை கோடரி தொலைவில் போய் விழுந்தது. முறிந்துபோன பாதிக் கோடரிக் காம்புடன் கையில் மறு பாதிக் கோடரிக் காம்புடன் ஒருகணம் செய்வதறியாது திகைத்து நின்றான் இலங்கநாதன். மனைவி விறகுக்குத் தொணதொணக்கப் போகிறாளே! அவனுக்குப் பளிச்சிட்டது ஒரு யோசனை. சற்றுத் தொலைவில் விழுந்து கிடந்த கோடரியை நோக்கினான். அருகில்சென்று அதை எடுத்து அதில் பொருந்தியிருந்த உடைந்துபோன பாதிக் கோடரிக்காம்பைக் கழற்றி எடுத்தான்; எஞ்சியிருந்த பாதிக் கோடரிக் காம்பையும் எடுத்துக்கொண்டான். கோடரியைத் தாழ்வாரத்தில் போட்டான். இரு துண்டுகளாகிப்போன கோடரிக் காம்புடன் சமையற்கட்டுக்குள் சென்றான்.

"இந்தாப்பா! அந்தவேங்கை மரக்குத்தியைப் பிளக்க முடியாது! இப்போதைக்கு இதை வைச்சு எரி'' – என்று கூறியவாறு உடைந்துபோன கோடரிக் காம்புத் துண்டுகளைத் தானே அடுப்புக்குள் செருகினான்.

கணவன் வியர்த்து விறுவிறுத்து நிற்பதைக் கண்டு பதில் ஏதும் கூறாது, அவனையும் அடுப்பையும் மாறிமாறிப் பார்த்தவாறு நின்றிருந்தாள் இந்திராணி.

கோடரிக் காம்புகளைத் தீ பற்றிக்கொண்டது.

வெளியே வேங்கை மரக்குற்றி அமைதியாகக் கிடந்தது.

உருவகக்கதை

# தமிழ் ஆண்டு

தமிழர்களுக்குக் காலத்தைக் கணக்கிடத் தொடர் ஆண்டு இல்லை என்னும் குறை இருந்துவந்தது. அந்தக் குறையைப் போக்கத் தமிழ் அறிஞர்களும் புலவர்களும் அடங்கிய தமிழகப் புலவர்குழு முயற்சி மேற்கொண்டது.

1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழகப் புலவர் குழு கூடியது. யேசுநாதரின் பெயரால் கிறிஸ்தவர்களுக்கு தொடர் ஆண்டு உள்ளது. முகமது நபியின் பெயரால் இஸ்லாமியர்களுக்கு ஹிஜிரி ஆண்டு இருக்கிறது. புத்தன் பெயரால் புத்தர் நிர்வாண ஆண்டு வழக்கில் உள்ளது. மாவீரரின் பெயரால் சமணர்களுக்கு மாவீரர் நிர்வாண ஆண்டு இருக்கிறது.

இதுபோல உலகம் புகழும் குறளைத் தந்த திருவள்ளுவர் பெயரால் தமிழர்களுக்கு ஒரு தொடர் ஆண்டினைப் புலவர் குழு உருவாக்கியது.

இயேசுநாதரைவிடத் திருவள்ளுவர் 31 ஆண்டு முன் பிறந்தவர் என்றும் திருவள்ளுவர் ஆண்டுப் பிறப்பு தை மாதம் முதல் நாள் என்றும் அறிஞர்கள் ஆராய்ந்து அறிவித்தனர்.

வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 1991+31ஐக் கூட்ட வரும் 2022 திருவள்ளுவர் ஆண்டு ஆகும். 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் தொடர் ஆண்டினைப் பயன்படுத்த மாறு ஆணையிட்டது. 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலகங்களிலும் திருவள்ளுவர் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வங்காளிகளுக்கு, பார்சிகளுக்கு, யூதர்களுக்கு, சவுராட்டிரர்களுக்கு, மலையாள நாட்டினருக்குத் தொடர்ஆண்டுகள் இருக்கின்றன தமிழர்களுக்கு மட்டும் ஒரு தொடர் ஆண்டு இல்லையே என்னும் ஏக்கத்தைப் போக்கிய தமிழகப் புலவர் குழுவைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்றியுடன் போற்றுகிறது

பொங்கல் திருநாள் தான் திருவள்ளுவர் புத்தாண்டு என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்.

நன்றி:- ராணி,
(20 – 1 – 91)

## 2-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி பத்மினி பாலச்சந்திரன்**
**(அச்சுவேலி)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15. 01. 1953 | 25. 04. 1989 |


என் உயிருக்குயிரான பத்மினிதேவியே! வாடாத இதயமலரே! என் இல்லத்தரசியே! மனைக்கு விளக்காக இருந்த மாணிக்கமே! நின்பிரிவால் வாடுகிறோம். இரண்டாண்டு எப்படி நீங்கிற்றோ தெரியவில்லை.

நின் ஆன்மா அமைதியடையச் சிவபெருங்கடவுளுடைய பொற்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
உறவினர்.

(B/3430)

## 45 ஆம் நாள் நினைவலைகள்



**லெப். வாணி**
**(சபாபதி சிவராணி)**

| தாய்மடியில்:- | தமிழ் அடியில்:- |
|---|---|
| 18-10-1972 | 20-03-1991 |

**திதி: 03 05-1991**

கல்லறைத் தூங்கிய
பெண்புலி வாணி
காட்டிய பாதையில்
காவியம் படைப்போம்!
கல்லறை மீதினில்
ஆணை எடுப்போம்!
வெல்லும் ஈழம்
படைத்தே ஓய்வோம்!

எம் கண்மணியின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு – சிலாவத்துறையில் இவருடன் மரணித்த வீர வேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

பெற்றோர், சகோதரர்
உறவினர்.

(R/1357)

# சந்திரசேகரால் ராஜீவிற்கு சில சங்கடங்கள்



சந்திரசேகர்



ராஜீவ்காந்தி

இந்தியாவின் பத்தாவது தேர்தல்களம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. வேட்பு மனுக்கள் தாககல் செய்யப்பட்டு விட்டன. தொகுதிகளில் யார் யாருக்கு இடையில் போட்டி என்பதும், இருமுனைப் போட்டியா, மும்முனைப் போட்டியா; அல்லது அதற்கும் மேலா எனவும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் தீவிர பிரசாரத்தில் இறங்கிவிட்டனர்.

இவ்வாறு தேர்தல் களம் ஒருபுறம் சூடு பிடித்துக் கொண்டு இருக்கும் வேளையில், பொதுத்தேர்தலில் இருந்து சற்று பிற்போடப்பட்டுள்ளன பஞ்சாப், அஸாம் தேர்தல்கள். இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்திக்கும், ஜனதாதள எஸ் கட்சித் தலைவரும், தற்போதைய காபந்து அரசாங்கத்தின் பிரதமருமானசந்திரசேகருக்கும் இடையிலான ஒரு தனிப்பட்ட அரசியற் பலப் பரீட்சைக் களமாக அமைந்துள்ளது எனலாம்.

சந்திரசேகரை பிரதமராக்க இந்திரா காங்கிரஸ் சம்மதித்தபோது சந்திரசேகர் முழுமையாக இந்திரா காங்கிரஸின் சொற்படியே கேட்டு நடப்பார் என இந்திரா காங்கிரஸ் எண்ணியது. ஐம்பது எம். பிக்களை மட்டும் கொண்டு ஆட்சி அமைக்க முற்பட்டிருக்கும் சந்திரசேகருக்கு தம்மைவிட்டால் வேறு வழி இல்லை என்பதே இந்திரா காங்கிரஸின் எண்ணத்திற்குக் காரணமாகும். உண்மையும் அதுதான். இதனைச் சந்திரசேகரும் உணர்ந்திருந்தார்.

ஆனால் மண்டல் கமிஷனாலும், பாபர் மசூதி ராம ஜென்ம பூமி விவகாரத்தினாலும் குழம்பிப்போய் இருந்த இந்தியாவில் உடன் தேர்தலை நடத்துவதற்கு இந்திரா காங்கிரஸ் விருப்பம் கொண்டிராமையினால் தான் தான் பிரதம மந்திரியாக ஆவதற்கு இந்திரா காங்கிரஸ் சம்மதித்திருந்தது என்றும் சந்திரசேகருக்குப் புரிந்திருந்தது. இந்நிலையில் பிரதமர் பதவி ஏற்ற சந்திரசேகர் இந்திரா காங்கிரஸின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில்- குறிப்பாக இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் மாநில அரசாங்கங்களைக் கலைத்தல் -தன்னால் இயன்றளவு தாமதப்படுத்தியே வந்தார்

இதனால் இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் ராஜீவ் காந்தி ஆத்திரம் அடைந்திருந்தாலும் தேர்தலை உடன் விரும்பாமையினாலும், தாம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குரிய சூழ்நிலை-கட்சி மாறும் எம்.பி.களைக்கொண்டாவது- உருவாவதினாலும் அவருக்கு சற்றுக் கால அவகாசம் தேவையாக இருந்தது.

ஆனால், இக்கால அவகாசம் சந்திரசேகர் தன்னைப் பலப்படுத்துவதற்கு வாய்ப்பாகப் போய்விடும் என்ற அச்சமும் அவருக்கு இருந்தது ஏனெனில் நான்குமாத ஆட்சியில் சந்திரசேகர் குறிப்பிடக் கூடிய நிலையில் ராஜீவ்காந்தியைப் பின்னடையச் செய்தார் என்பது மட்டும்உண்மை. பஞ்சாப், அஸாம் பிரச்சினையில் குறிப்பிடக் கூடிய வெற்றி கண்டார். இந்நிலையில் இன்னும் சில மாதங்களுக்கு சந்திரசேகர் ஆட்சி நடத்தலாம். ஆனால், அவரது செயற்பாடுகள் கட்டுப்பட்டவையாக இருத்தல் வேண்டும் என ராஜீவ் காந்தி திட்டமிட்டார்.

இதன் காரணமாக வளைகுடாப் போரின் போது சந்திரசேகர் அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையை ராஜீவ் காந்தி வெளிப்படையாகச் சாடினார். ராஜீவ்காந்தி தமது கொள்கையை வெளிப்படையாச் சாடத் தொடங்கியதும் சந்திரசேகர் தனது ஆட்சிக் காலத்தின் எல்லையை உணர்ந்து கொண்டார்.

இந் நிலையில் ராஜீவ்காந்தியினது காங்கிரஸ் கட்சியின் கொள்கையை முறியடிக்கும் நோக்கமாக தாமே முன்வந்து பதவியை இராஜினாமாச் செய்தார் சந்திரசேகர். இதுசந்திரசேகரின் இராஜதந்திர வெற்றி என்றே கொள்ள வேண்டும். அத்தோடு ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவமின்மைக்கு சந்திரசேகர் வழங்கிய தண்டனை எனவும் கொள்ளலாம்.

இந்நிலையில் ராஜீவ் காந்தி எதிர்பாராத நேரத்தில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. காபந்து அரசாங்கத்திற்கும் பிரதமராக சந்திரசேகரே நியமிக்கப்பட்டார் ஆனால் வி.பி சிங்அரசாங்கம்கலைக்கப்பட்ட போது இருந்த நிலையைவிட நிலைமை ஓரளவுக்கு இந்திரா காங்கிரஸிற்குச் சாதகமாகவே இருந்தது.

காபந்து பிரதமராக நியமிக்கப்பட்ட சந்திரசேகர் இந்திரா காங்கிரசிற்கு எதிரான செயற்பாடுகளை தனது அதிகாரத்திற்கு உட்பட்ட ரீதியில் தொடர்ந்தும் மேற்கொள்வதில் அக்கறையாக இருந்தார்.

இந்திரா காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கலைக்கப்பட்டு தீவிரவாத நடவடிக்கைகள் காரணம் காட்டப்பட்டு பல ஆண்டுகளாகத் தேர்தல்நடைபெறாத பஞ்சாப் மாநிலத்திலும், அதன்பின்னர் கலைக்கப்பட்ட அஸாம் மாநிலத்திலும் தேர்தல் நடத்தும் சூழ்நிலை உள்ளதாக காபந்து அமைச்சரவை முடிவு செய்து ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு அறிவித்தது ஜனாதிபதி அமைச்சரவையின் இம்முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டபோதும் அமைச்சரவை தமது முடிவை மாற்றவில்லை.

> ராஜீவ் காந்தியின் தயவில் சந்திரசேகர் பிரதமராகினாலும்,, ராஜீவ் நினைத்ததுபோல் சந்திரசேகர் முழுமையாகச் செயற்படவில்லை.
>
> ராஜீவையும் சில அரசியல் நெருக்கடிக்குள் சந்திரசேகர் தள்ளிவிட்டார்.

இதன் காரணமாக ஜனாதிபதி பஞ்சாப் மாநிலததிலும் அஸாம் மாநிலத்திலும் தேர்தல் நடத்த சம்மதிக்க வேண்டி வந்தது. இதனைத் தொடர்ந்து பஞ்சாப்பிலும், அஸாமிலும் பொதுத் தேர்தலுடன் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், இம்மாநிலங்களின் ஆளுநர்கள் பாதுகாப்பு நிலைமை சீரில்லை என அறிவித்ததைத் தொடர்ந்து தேர்தல் பிற்போடப்பட்டது. இது மறைமுகமாக ஜன திபதி ஆர். வெங்கட்ராமனின் விருப்பத்தின் பேரில் நடைபெற்றதெனக் கருதலாம். இருப்பினும் தவிர்க்க முடியாமல் ஜூன் மாதத்தில் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டன.

பஞ்சாப், அஸாம் மாநிலங்களின் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்பட்டமையானது சந்திரசேகருக்குக் கிடைத்த அரசியல் வெற்றி என்று திட்டவட்டமாகக் கூறலாம். ராஜீவ் காந்தியின் தேர்தலை தாமதப்படுத்துவதற்கான எந்த முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை. இவ்வெற்றி சந்திரசேகருக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றியாகும்.

ஆனால் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டாலும் அவ்விரு மாநிலங்களிலும் தேர்தல் நடைபெறுவதைத் தடுப்பதில் ராஜீவ்காந்தி தீவிரமாக உள்ளார். இம் மாநிலங்களில் தேர்தல் நடைபெறுவது இந்திரா காங்கிரஸின் கொள்கைக்கு ஏற்பட்ட தோல்வி மட்டுமல்ல தனக்கு நேரடியாக ஏற்பட்ட தோல்வி எனவும் ராஜீவ் காந்தி கருதுகின்றார்.

இந் நிலையில் தாம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்பட்சத்தில் பஞ்சாப் அஸாம் தேர்தல் நடத்துவதை தாம் மறுபரிசீலனை செய்யப் போவதாக ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். ஆனால் அவ்வாறான ஒரு நடவடிக்கையினை மேற்கொள்ள புதிய அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என இந்திய தேர்தல் கமிஷன் தலைவர் ரி என் சேஷன் தெரிவித்துள்ளார். 'பஞ்சாப்பிலும் அஸாமிலும் தேர்தல் நடத்தும் திகதியை மாற்றமுடியாது இந்தஇரண்டு மாநிலங்களிலும் தேர்தல்பணிகளைப் பாதியில் நிறுத்தும் அதிகாரம் புதிய அரசாங்கத்திற்குக் கிடையாது' என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கமிஷனரின் இந்த அறிவிப்பானது சந்திரசேகர் இராஜதந்திர ரீதியில் ராஜீவ் காந்தியைத் தோற்கடித்து விட்டார் என்றே கொள்ள வேண்டும் அதேவேளை பஞ்சாப்பிலும்அஸாமிலும்தேர்தல் நடத்த சூழ்நிலை சரியாக இல்லை என பேசிவந்த பாரதீய ஜனதாக் கட்சி போன்றவையும் தற்பொழுது தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளன. மேலும் கடந்த வாரம் பஞ்சாப்பில் நடந்த நகர சபைத் தேர்தல்களிலும் பெரும் வன் முறைகள் இடம் பெறாமை சந்திர சேகருக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகும்.

பஞ்சாப் மாநிலத்திலும், அஸாம் மாநிலத்திலும் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறுமானால் கடந்த காலத்தில்இம் மாநிலங்களில் தேர்தல் நடைபெறாமைக்கும் நெருக்கடி நிலை தொடர்வதற்கும் இந்திரா காங்கிரஸே முக்கியகாரணமாம்என்ற குற்றச்சாட்டை இந்திரா காங்கிரஸ்மறுக்கமுடியாது.

இது பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸிற்கு பிறமாநிலங்களில் குறிப்பிடக் கூடிய பாதிப்புக்களைஏற்படுத்தலாம் அதே வேளை பஞ்சாப் தேர்தல் நடந்தால் அதில் இந்திரா காங்கிரஸ் கட்சி போட்டியிடாது என அறிவித்துள்ளது. இந் நிலையானது இந்தியாவில் உள்ள ஒரே ஒரு பலமான தேசியக் கட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி தான் என்ற அதன் நிலைக்கு இழுக்கை ஏற்படுத்தக் கூடியதாகும்

தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைக்காது என்பதனால் இந்திராகாங்கிரஸ் தேர்தலில் தாம்போட்டிஇடவில்லை என கூறினாலும் பஞ்சாப் மாநிலத்தில்இந்திரா காங்கிரஸ் தனது செல்வாக்கை இழந்து விட்டது என்பதே உண்மையாகும். இதற்கு எடுத்துக்காட்டாக பஞ்சாப் மாநிலத்தில் நடந்த நகரசபைத் தேர்தல்களில்பாரதீய ஜனதாக்கட்சி பெற்ற வெற்றியைக் குறிப்பிடலாம்.

சுருக்கமாகக் கூறின் பஞ்சாப் அஸாம் தேர்தல்கள் கடந்த காலத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி தனது ஆட்சி நலனுக்காக தேசிய நலனை எவ்வாறு பலியிட்டது என்பதைஉணர்த்தும் அதேவேளை இந்திரா காங்கிரஸ் கட்சிக்குதேசிய கட்சிஎன்ற ரீதியில் ஒரு சரிவை ஏற்படுத்தும்என்பதில் சந்தேகம்இல்லை

இச் சரிவிற்கு இந்திரா காங்கிரஸின் கடந்த கால நடவடிக்கைகளே காரணமாக இருப்பினும்,அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து சங்கடத்தை ஏற்படுத்தியவர் சந்திரசேகர் எனறால் மிகையாகாது.

ஜெயா

---

## பாற்கஞ்சி..

(4ஆம்பக்கத் தொடர்ச்சி)

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல் வெளியை ஊடுருவிச் சென்று எங்கேயோ லயித்துப் போயிருந்தது.

'வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரை புரண்டோடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து தண்ணீர் பெருக்கெடுத்து விடும். என்னுடைய நெற் பயிர்கள் கீழே விழுந்து உருக்குலைந்து விட்டன. நெற்கதிர்கள் உதிர்ந்து வெள்ளத்துடன் அள்ளுண்டு போய்க் கொண்டிருக்கின்றன..' என்று அவன் எண்ணி ஏங்கினான்.

காமாட்சி எஞ்சிய அறைக்குப் போனாள், அது வெறுமனே கிடந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை விம்மிக் கொண்டு வந்தது. அங்கே நிற்கத் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு ''நாளைக்கும் தாரியாம் மா பாற்கஞ்சி'' என்று கெஞ்சிக் கேட்டான். அவன் கஞ்சி குடித்த கோப்பை அவளுக்கு முன்னே காலியாகக் கிடந்தது. அநேக நாள் பழக்கத்தினாலே ,'நாளைக்...' என்று மட்டுமே அவளால் சொல்ல முடிந்தது. அந்த அரைகுறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது.

## விழுதுகள் ...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்தது. ஓலமிடும் அந்த நேரத்திலும் போராளிகளிடம் அன்ரி வேண்டிக் கொண்டது இதுதான் 'பிரதீஸ் இல்லையெண்டு நீங்கள் எல்லாரும் வராமஇருந்திடாதீங்க. எல்லாம் எனக்குப் பிள்ளையள் தான். எல்லாரும் வாங்க,எல்லாரும் வாங்க''

சோகங்கள்ஆழமாகப் புதைக்கப்பட்டன. வெகுசீக்கிரத்திலேயே அன்ரி வழமைக்குத் திரும்பினார். மீண்டும்பழைய படி சுறுசுறுப்பாக உழைக்கத் தொடங்கினார். இயக்கத்திலிருந்து விலகி வந்த மகளை துரோகி எனத் திட்டினார்.

காலம் உருண்டோடியது. ஆனால் அன்ரியின் பணியோ தொடர்ந்தது இந்திய இராணுவம் வந்தது. மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பலமான கோட்டையாக ஆரையம்பதியை மாற்றிய அன்ரி மீது அடிக்கடி பழி தீர்த்துக் கொண்டனர் துரோகக் கும்பல்கள். இந்தியப்படையினரை முந்திக்கொண்டு ஓடும் காலம் வந்தபோது அன்ரியைப் பிடித்து பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் சூடுபோட்டனர். சூடுபோட்ட கை கூட ஒரு காலத்தில் போராட்டத்தின் பெயரால் அன்ரியிடம் சாப்பாடு வாங்கிய கைதான். வேதனையுடன் தாங்கிக் கொண்டார் அன்ரி. ''எனக்கே இப்படியென்றால் போராளிகளுக்கு என்ன செய்வார்கள்? திருக்கேதீஸ்வரத்தானே! போராளிகளை விடுதலை செய்; உன்னிடம்வருகிறேன்'' எனவேண்டிக் கொண்டார்.

போராளிகள்விடுதலையாகி மட்டக்களப்புக்கு புகையிரதத்தில் வருகிறார்கள் என்றுகேள்விப்பட்டதும் புகையிரதநிலையத்துக்குச் சென்ற அன்ரி, நேர்த்திக்கடனெல்லாம் முடிச்சிட்டு வாறன்' என்று அவர்களிடம்விடைபெற்றுக் கொண்டார். திருக்கேதீஸ்வரம், யாழ்ப்பாணம் எல்லாம் நேர்த்திக் கடன்களை முடித்த அன்ரி கம்பிச் சூடு ஆறாத உடலுடனேயே பிரசாரக் களத்தில் இறங்கினார். போராட்டஅனுபவங்கள் அவரைப் பேசவைத்தன.

சிறிலங்காப் படையினருடனான போர் வெடித்ததையடுத்து மீண்டும் ஆரையம்பதிக்கு திரும்பினர் துரோகக் கும்பல்கள். முன்னர் இந்திய இராணுவத்தின் முதுகுக்குப் பின்னால் வந்தவர்கள் இப்போது சிறிலங்கா இராணுவத்துடன் வந்தனர். கம்பியால் குறிவைத்தும் அன்ரி மாறவில்லையே என ஆத்திரம்கொண்டனர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

ஆரையம்பதியில் தோணிக்காரர்கள் ஆற்றில் இறங்கக் கூடாது எனத் தடையிருந்தது அவர்கள் போராளிகளுக்கு உதவி புரிபவர்களாகையால் அவர்களது குடும்பம் பட்டினியில் கிடக்க வேண்டுமாம். ஆனாலும் போராளிகளுக்கு உதவி செய்யும் மனப்பான்மையை அவர்கள் இழக்கவில்லை. ஆற்றுக்கு அப்பால் உள்ள படுவான்கரையில் அன்ரிக்குப் பழக்கமான போராளிகள் வந்து நிற்கின்றனர் என்பதை அறிந்த துரோகக் கும்பல்கள் அன்ரி எப்படியும் படுவான்கரைக்குச் செல்வார் என்று எதிர்பார்த்தன. அவர்களின் எதிர்பார்ப்புப் போலவே இரகசியமாக ஒரு தோணிக்காரரின் உதவியுடன் படுவான்கரைக்குச் சென்றார் அன்ரி. அங்குள்ள போராளிகளிடம் அவர்களுக்குப் பிரியமான சாப்பாடுகளைக் கொடுத்து உரையாடிவிட்டுத் திரும்பினார் அன்ரி. அன்ரிக்கு எதிராகத் துப்பாக்கியை உயர்த்தினர் அங்கே காத்திருந்த துரோகிகள். ஆரையம்பதி மண்ணில் புலிகளை வளர்த்த அன்ரி அதே மண்ணில் துரோகிகளின் குண்டுக்கிரையானார் துப்பாக்கியை உயர்த்தியவன் ஒரு காலத்தில் போராளியாகத் தெரிந்தபோது இன்று புலிகளுக்கு எதைச் செய்தாரோ அன்ரி அதைத்தான் அவர்களுக்கும் செய்தார்.

ஆனால் போராளியாக இருக்கத் தவறியவர்கள் போராளிகளின் ஆலமரத்தைத் தறித்தார்கள். அவர்கள் ஒன்றை உணரத் தவறிவிட்டார்கள் இந்த ஆலமரம் எத்தனை விழுதுகளைத் தாங்கியுள்ளது என்பதை; அந்த விழுதுகள் மரத்தின் பணியினைத் தொடரும் என்பதை.

# சூறாவளியால் பங்களாதேஷில் ஓர் இலட்சம் மக்கள் பலி

(டாக்கா)

பங்களாதேஷின் இருபது வருட வரலாற்றில் வீசியிருக்கும் கடுமையான சூறாவளியின் விளைவாக ஓர் இலட்சத்திற்கும் மேலான மக்கள் பலியாகியிருக்கலாம் எனக் கடைசியாகக்கிடைத்த அரசாங்க மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன ஏராளமான சொத்துக்களும் நாசமாகியுள்ளது குறைந்தபட்சம் இருபதாயிரம் பேரைக் காணவில்லை எனத் தெரியவருகிறது பல சிறிய தீவுகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமையன்று மணிக்கு 145மைல் வேகத்தில் வீசிய கடுமையான சூறாவளி கரையோரப் பிரதேசங்களை யும் தாண்டி, சமவெளிப் பிரதேசங்களையும் தாக்கியது சூறாவளியின் காரணமாக பட்டினியும், நோய்பரவும் ஆபத்தும் பெருகியுள்ளது.

பங்களாதேஷில் வீசிய கடும் புயலின் பின்னர் சிட்டகாங் பகுதிக்கு மேலாகபறந்த இராணுவ ஹெலிகொப்டரில் இருந்து பார்வையிட்ட செய்தியாளர்ஒருவர் ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான சடலங்கள் வெள்ளத்தில் மிதக்கண்டதாகக் கூறியுள்ளார் ஒரே வெள்ளக்காடாகக் கிடக்கும் சிட்டகாங் பகுதிக்கு தரை மார்க்கத் தொடர்புகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை பச்சிளம் பாலகர்களினதும் வயோதிபர்களினதும் சடலங்களே பெரும்பாலும் காணப்பட்டதாக தெரிகின்றது. சேத இடங்களைப் பார்வையிட்ட பிரதமர் பேகம்கலிதா ஸியா சர்வதேச சமூகத்தின்உதவிகளை நாடியுள்ளார். இதையடுத்து இந்தியா தனது ஹெலிகொப்டர் அணியொன்றை பங்களாதேஷிற்கு அனுப்பியுள்ளது. சவூதி அரேபியா விமானங்கள் மூலம் உணவுப் பொருள்கள் மற்றும் உடுதுணிகளை அனுப்பி வைத்துள்ளது. பிரிட்டனும் அமெரிக்காவும் பெருமளவு நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஓர்ஸ்பாம் போன்ற நிவாரணம் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் டாக்கா சென்றுள்ளனர்.

## குர்திஷ் இன அகதிகள் ஈராக் திரும்பக் கோரிக்கை

(தெஹிரான்)

துருக்கியிலும் ஈரானிலும் உள்ள குர்திஷ் இன அகதி மக்கள் விரைவில் ஈராக் திரும்புமாறு ஈரானிய ஜனாதிபதி ரப்சன் ஜானி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் கூட்டணிப் படைகளும்இப்பிராந்தியத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். குர்திஷ் இன மக்கள் தொடர்ந்து துருக்கியிலும் ஈரானிலும் இருப்பதால் அவர்களை சாக்காக வைத்து அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் இப்பிராந்தியத்தில் இருப்பதனால் உறுதிப்பாடற்ற நிலைமை உருவாகி வருவதாகவும் ஈரானின் அதிபர் ரப்சன் ஜானி தெரிவித்துள்ளார்.

## தலைவரைகொல்ல முயன்ற துணைத் தலைவர் கொலை

(மொஸ்கோ).

சோவியத்யூனியனின் ஜோர்ஜியவில் அன்சாரியன் சுயநிர்வாகக் குடியரசின் தற்காலிக தலைவரைத் துணைத் தலைவர் சுட்டதை அடுத்து துணைத்தலைவர் தலைவரின் மெய்க்காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துணைத்தலைவர் நொடார் இன்காயும் அவரது கூட்டாளிகளும் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது தலைவர் சுவாகிரைது அலுவலகத்திற்குள் திடீரென்று புகுந்து அங்கு பேசிக்கொண்டிருந்த அன்சாரியன் தலைவரையும் ஜோர்ஜியவின் துணைப்பிரதமரையும் சுட்டுக் காயப்படுத்தினார்கள்.

இதன்பின்னர் தலைவரின் மெய்க்காப்பாளர்கள்துணைத் தலைவரைச் சுட்டுக்கொன்றனர்.

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வர்த்தக வங்கிக் காசோலைஒன்றும், இலங்கை வங்கிக் காசோலை ஒன்றும் இணுவிலைச் சேர்ந்த மலேரியா தடுப்பு இயக்க ஊழியர் ஒருவரால்கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

★

தீவுப்பகுதி வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஏ. கஜேந்திரன் என்பவரின் குடும்ப உணவு முத்திரைகள் யாழ். கனகரட்னம் ம. மகா வித்தியாலய முன் புறத்தில் இருந்து ஆனந்தரூபன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

---

மே 20 இல்

களாக பெரும்பாலும் அதிபர்களும், ஆசிரியர்களும் ஈடுபட்டிருப்பதனாலும் இடம் பெயர்ந்தோர் நகரப் புறத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் தங்கியிருப்பதனாலும், காரைநகர் மற்றும் தீவகங்களில் நிலைமை சுமுக நிலை அடையாதமையினாலும் மே மாதம் 20ஆம் திகதி பாடசாலைகளைத் தொடங்குவதெனத்தீர்மானிக்கப்பட்டுள்ளதென ஆர்.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் மே மாதம் 6ஆம் திகதிமுதல் 20ஆம் திகதிவரை நடாத்தப்படாத பத்துப் பாடசாலை நாட்களையும் இத்தவணையில் வருகின்ற சனிக்கிழமைகளில் நடாத்திபாடசாலை நாட்களை ஈடுசெய்ய வேண்டுமெனப் பாடசாலை அதிபர்களுக்குத் தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜெப். ஜேணல் போர்க் கலாமன்றம்

(யாழ்ப்பாணம்)

ஜெப் ஜேணல் போர்க் ஞாபகார்த்த கலாமன்றம் இன்று மணியம்தோட்டத்தில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிப் பிரமுகர்கள்கலந்துகொள்வதுடன் மெய்வல்லுநர் போட்டியும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

---

புல்லுமலை

வாங்குவதற்கு மட்டக்களப்பு நகருக்குச் சென்றசமயம் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

---

இலவச

வேளை தற்சமயம் நிவாரண அட்டையில் இல்லாத தீவகப்பகுதி மக்கள் யாழ் கச்சேரியில் தற்காலிக நிவாரண அட்டைபெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்படும் 38 ஆம் இலக்க நிவாரணத்தை பத்தாம் திகதிக்குள் கொடுத்து முடிக்கும்படி சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது. குமண கப்பலில் 37 ஆம் இலக்க நிவாரணத்துக்கென உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படுவதையடுத்தே விரைவாகக் கொடுத்துமுடிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இது தீவுப் பகுதி மக்களுக்குப் பொருந்தாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (43,ச)

---

தீவக சங்கக்

மேற்படி நிலையங்களில் வைத்து வழங்கப்படும்.

இதேவேளை வேலணைப் ப. நோ. கூ. சங்கத்தின் அலுவலகம் தற்காலிகமாக இல. 295/35 காங்கேசன்துறை வீதி ஒழுங்கையில் செயற்படுகின்றது.

---

திருமலையில்

எனவும் தெரிவித்தது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றிவளைக்க முற்பட்டபோதே இம்மோதல் ஏற்பட்டதாகவும், இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப்புலிகள் சில ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் திருமலையில்இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேதினத்தன்று

தாக்குதல்கள் இடம்பெற்றன. இத்தாக்குதலில சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான வை - 12 ரக விமானம் ஒன்று. ஒரு அவ்ரோ விமானம் ஹெலிகொப்ரர் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. இத்தாக்குதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

---

அகதி முகாமில்

னர், கடந்த செவ்வாயன்றும் 58ஆம் கட்டைப் பகுதியில் இருந்து சின்னத்துரை வாமதேவன் உட்பட ஐந்து பொதுமக்கள் இராணுவத்தினரால் கைதாகியுள்ளனர். இதேவேளை கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதியன்று சயமுந்தான்64 ஆம் கட்டைப்பகுதிக்கு இராணுவத்தினருடன் வந்த முஸ்லிம் காடையர் 40 ஆடுகள், 47 மாடுகள், மூன்று தண்ணீர்இறைக்கும்இயந்திரம்என்பனவற்றை எடுத்துச்சென்றுள்ளனர் என்று தெரியவருகிறது.

வவுனியாவில்

லைத் தொடுத்தனர். 11.15 மணிவரை நீடித்த இந்த மோதலின்போது இராணுவத்தினருக்கு உதவியாக மூன்று ஹெலிகொப்டர்கள் தாக்குதலை மேற்கொண்டவண்ணம் இருந்தன. இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் கிடைக்கவில்லை.

## தலைவரின் கொள்கையை மக்கள் ஏற்றுள்ளனர் - தீபன்

(கிளிநொச்சி)

இம்முறை கிளிநொச்சியில் மிகவும் சிறப்பான முறையில் மேதினம் கொண்டாடப்பட்டது.

இரணைமடுச்சந்தியிலிருந்து பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று மாலை 4 மணியளவில் ஆரம்பமாகியது. இவ் ஊர்வலத்தில் 25ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்களும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் நூற்றுக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களும், மாட்டு வண்டிகளும்சென்றன. ஊர்வலம் சுமார் 3 மைல் நீளம்வரை இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது ஊர்வலம் மாலை 6 மணியளவில் கூட்டம்நடைபெற்ற கிளிநொச்சி மத்தியமகாவித்தியாலய மைதானத்தை சென்றடைந்தது.

பொதுக்கூட்டம் மாலை 6 30 மணியளவில் ஆரம்பமாகியது. விடுதலைப்புலிகளின் வன்னிப்பிராந்திய அரசியல் பொறுப்பாளர் மனோ தலைமையில் நடைபெற்றது

விடுதலைப் புலிகளின் வன்னிப் பிராந்திய இராணுவப் பொறுப்பாளர் தீபன் பேசுகையில் தலைவரின் சமதர்ம கொள்கையை ஏற்று சகலரும் ஒரு அணியில் நின்று எமது விடுதலைக்காகப் போராட முன்வந்துள்ளனர் என்றும் பெண் அடிமை சீதனம் ஆகியனவற்றுக்கும் எதிராகவும் நாம் பாரிய அளவில்போராட வேண்டும் என்றும் கூறினார்.

திரு. கலியுகவரதன், திரு. மா. சிவபாலன் ஆகியோரும் பேசினர்.

## மடு மேதின ஊாவலத்தில் 5,000 மக்கள் பங்கேற்றனர்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு மடு அகதி முகாமில் தங்கியிருக்கும் மக்களும் நேற்றுமுன்தினம் மாபெரும் மேதின ஊர்வலம் ஒன்றை நடாத்தினர்.

முல்லைத்தீவு மன்னார், வவுனியா, திருக்கோணமலை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த இராணுவ நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட இம்மக்கள் இணைந்து இம்மாபெரும் பேரணியை நடாத்தினர் பண்டிவிரிச்சான் பாடசாலையில் இருந்து புறப்பட்ட இப்பேரணியில் சுமார் 5,000த்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர் ஊர்வலத்தின் இறுதியில் மேதின ஊர்வலம் ஊர்ந்து சென்ற வேளையில் ஒன்றும் இடம்பெற்றது இப்பேரணி மடு உதவி அரசாங்க அதிபர் பணிமனையை அடைந்த சமயம் மக்கள் சிறிலங்கா அரசுக்கெதிராக ஆவேசம் கொண்டு வானதிரக்கோஷங்களை எழுப்பியதுடன் எங்கள் தலைவர் பிரபாகரன் என்று ஏகோபித்த குரலில் முழக்கமிட்டனர்.

ஊாவலத்தின் முடிவில் பொதுக்கூட்டமொன்றும் இடம்பெற்றது. இதில் கலை நிகழ்ச்சிகளும இடமபெற்றன.

## நாளை "விடுதலைப் புலிகள்" வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

நாளை விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ''விடுதலைப்புலிகள்'' பத்திரிகை குரல் 22 வெளிவர இருக்கின்றது.

இந்தப் பத்திரிகையில் கடந்த பங்குனி மாதம் இடம் பெற்ற சிலாவத்துறை இராணுவமுகாம் மீதான தாக்குதலின் முழு விபரமும் பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் என்று அரசின் அறிவிப்புக்களின் உள்நோக்கம் என்ன? என்ற அம்சமும், பயணிகள் அனுமதிப்பத்திரம்ஏன்? என்ற விடயங்களுடன் பல தரப்பட்ட அம்சங்களும் அடங்கியுள்ளன.

## தபால் பொதிகள் யாழ். வந்தன

(ஈச்சமோட்டை)

லங்காசிறி கப்பலில் வந்த 176 தபால் பொதிகள் யாழ். பிரதமதபாலகத்திற்குஎடுத்துவரப்பட்டுள்ளது இதில் 48 பொதிகள யாழ் நகரப்பகுதிக்கும், ஏனைய 128 பொதிகளும் ஏனைய இடங்களுக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை தரம் பிரிக்கப்பட்டு இன்று வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படுமென தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது. (43)

---

மேற்கத்தைய

ஜேர்மனியால் அனுப்பப்பட்ட தகரங்களில் அடைக்கப்பட்ட உணவு பழுதாகியுள்ளன என்றும். அந்த உணவு 1986 ஆம் ஆண்டே அதன் பாவிப்புத் திகதிமுடிவடைந்து விட்டது என்றும் குர்திஷ் மக்கள்தெரிவித்தனர்.

இதே வேளை ஈரானிய அரசாங்கம் குர்திஷ் இன அகதி மக்களை பராமரிப்பதற்காக நாளொன்றுக்கு ஒரு கோடி டொலரை செலவழிப்பதாகத் தெரிவித்துள்ளது.

## 61. 7 வீதம் சுயேட்சை

(சென்னை)

தமிழ்நாட்டில் சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் போட்டியிடும் 2.834 வேட்பாளர்களில் 1,748 பேர் சுயேட்சை வேட்பாளர்கள். அதாவது சட்டப்பேரவைத் தேர்தலில் நிற்பவர்களில் 61. 7 சதவிகிதத்தினர் சுயேட்சை வேட்பாளர்கள் ஆவர்.

## நிரந்தர வைத்திய பொறுப்பதிகாரி

(நல்லூர்)

கைதடி சித்த மருத்துவப் போதனா வைத்தியசாலை நிரந்தர வைத்தியப் பொறுப்பதிகாரியாக டாக்டர் திருமதி விக்னேஸ்வரி கைலாசபதி ஆயுர்வேத ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுத்தனது பதவியை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டார். பதவியேற்பு வைபவத்தின்போது, தற்சமயம் வைத்தியசாலையில் நிறைவேற்றப்படவேண்டிய உடனடித்தேவைகளைத் தீர்க்க முயற்சிக்கப்படும் என உறுதியளித்தார்.

முன்னாள்வைத்தியபொறுப்பதிகாரி டாக்டர் மனோரஞ்சிதம் தவத்துரை ஓய்வு பெறுவதற்காக விணணப்பித்ததையடுத்து மேற்படி நியமனம் ஆயுர்வேத ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டது.

## புங்குடுதீவில் திருட்டு

புங்குடுதீவுப் பகுதியிலுள்ள கடையொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவு நேரத்தில் உடைக்கப்பட்டு உணவுப்பொருள்கள் உட்பட பெறுமதியான பல பொருள்களுடன் ரொக்கப் பணமும் களவாடப்பட்டுள்ளது.

கோட்டைக்காடு பகுதியில் உள்ள பத்மநாதன் என்பவருடைய கடையே இவ்வாறு உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டன. (22)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

(1) வயது எல்லை: 18 வயது முதல் 30 வயது வரை
(2) உயரம்: 5 அடி 6 அங்குலம்
(3) கல்வித் தகைமை: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரண தரம்) க. பொ. த. (உயர்தரம்) வரை

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழக் காவல்துறை.

(B-2456)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை நிதி

பாசம் நிறைந்த நிதியே! உமது பால்முகம்
என் முன் தெரிந்தவண்ணம் இருக்கின்றது!
நீங்கள் எங்கள் முன் நிற்கின்றீர்கள்
உங்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றோம்
நீங்கள் எங்களிடம் வருவீர்கள் - அன்புமிகுந்த நிதியே!
பகைவன் இருக்குமிடம் சென்று நீதி கேட்டு
தமிழீழ மக்களுக்கு வாழ்வுகொடுக்கச் சென்றீர்
நீதிகேட்டு நிதிவந்து எங்களுக்கு பதில் எப்போது கூறுவாய்
எங்கோ சென்றாலும் நிச்சயம் வருவீர்கள்
போகுமிடம் கூறுவதற்காகளம் புகுமுன்எம்மிடம்வந்தீர்கள்
வந்தவேளை அன்புவார்த்தையைக்
கேட்ட நான்இருக்க வில்லை
செல்லும் இடமெல்லாம் எங்கள் நிதி வருகின்றார்
நாங்கள் திசை நான்கையும் பார்க்கின்றோம்,
இன்று வருவார் நிதி
நாளை வருவார் நிதி என எதிர்பார்தது நானும்
மனைவியும்
குழந்தைகளும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றோம்!

உமது நண்பன் குடும்பத்தினர்

கல்வியங்காடு. (R-1365

## புதிய பறவைஇனம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தில் புதியரககடற் பறவையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெண்ணிறமான இப்பறவை இதுவரை தெரியாத பறவை இனத்தைச் சேர்ந்தது என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## 45 ஆவது நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### வீரவேங்கை கயா

(தவநாயகம் – பவானி)

தோற்றம்:- 16-10 1971
மறைவு:- 20-03-1991

கயா அவர்களின் 45 ஆம் நாள் ஆத்மசாந்திப்பிரார்த்தனை(3-5-91) இன்று நீர்வேலி வடக்கில் நடைபெறுகின்றது. அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புன்னாலைக் கட்டுவனில்:
பிறந்த பவானி
நாட்டுப் பற்று மேவியே-
நின்றவள்
கயாவெனும் நாமம்-
கனிப்புடன் பெற்றவள்
சிலாபத் துறையில்-
களப்பலியாகினாள்
பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் உறைவிடமே!
நேசத்தால் உன்நினைவு
எம்மை என்றும் -
வாட்டுதம்மா!

சி. தவநாயகம், இராசேஸ்வரி
(தகப்பன்) (தாய்)
சகோதரர், குடும்பத்தினர்,

நீர்வேலி
03-05-91

(R-1368)

அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி!

உங்களுக்குத் தேவையான

- ★ கடவுச்சீட்டு (பாஸ்போட்) படங்கள்
- ★ அடையாள அட்டைப் படங்கள்
- ★ கலர்ப் படங்கள் என்பனவற்றை குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும்.
- ★ அடையாள அட்டை கவரிடுதல்
- ★ போட்டோஸ்ரற் பிரதி செய்து கொள்ளல் போன்ற இதர தேவைகளையும் மற்றும் அல்பம், புகைப்படச் சுருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

## இளந்தென்றல்

### படப்பிடிப்பாளர்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2461)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
1976 - 12 - 16

இறப்பு
1991 - 03 - 19

### அனித்தா

(வை. உதயறஞ்சினி)

(கொக்குவில் கிழக்கு, காளிகோயிலடி)

செழுமலர்கள் பூத்திருக்கும் தமிழீழம்
சிங்களத்துக் காடையரால் அலங்கோலம்
விடிவலையைத் தேடி நிற்கும் தமிழினம்
விடுதலைப் புலிகளின் தாகம் தமிழீழம்
உதயத்து றஞ்சினியாய் எழுந்து வந்தாய்
புலிகள் களத்தில் அனித்தலாய் மாறிநின்றாய்
கொக்குவிலாம் சிறுநகரில் பிறந்திருந்தாய்
கோதையவள் மண்ணுக்காய் உயிர்துறந்தாய்
அன்னையவள் அழகுநாமம் கமலா என்பார்
அறிவுடைய தந்தையவர் வைரமுத்து
செங்குருதி கொட்டிடவே களத்தில் வந்தாய்
சிலாபத்துறையிலே ஈழ மண்ணுக்கே உயிரைத்
- தந்தாய்

உங்கள் பிரிவால் வாடும்
பெற்றோர்கள், உறவினர்கள்,
மைத்துனன்மார்கள், நண்பர்கள், சகோதரர்கள்.

காளிகோயிலடி,
கொக்குவில் கிழக்கு. (B/2458)

## o குறைந்த விலை o நிறைந்த தரம் o சிறந்த சேவை

★ மின்சாரப் பொருள்கள் ★ புடைவை வகைகள் ★ கண்ணாடிப் பாத்திரங்கள்
★ பிளாஸ்ரிக் வகைகள் ★ சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
★ பாடசாலை அலுவலக உபகரணங்கள் ★ எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள் ★ அழகுசாதனப் பொருள்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெறுவதற்கு

**எழிலகத்திற்கு விஜயம் செய்யுங்கள்**

குறிப்பு : சிங்கப்பூர், அமெரிக்க கரன்சிகள் மாற்றியும் கொடுக்கப்படும்.

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

(B-2460)

# 45ஆம் நாள் நினைவுமடல்





## மேஜர் ரஞ்சன் சித்தப்பா
## [செல்வநாயகம் தயாளன்]

மண்ணில் உதித்தது
17 - 03 - 1968

மண்ணுக்காய் வித்தானது
20 -03 - 1991

அன்பின் சித்தப்பா:

"அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டக் காலம் தோறும் நான் அவதரிப்பேன்" என்று இதை கூறிய பெருமாளின் பொன்னாலைச் சந்நிதியில் தம்பி தொடக்கி வைத்த தர்மயுத்த வேள்வியில் ஆகுதியாகி அர்ப்பணமான புனிதப் போராளிகளில் நீயும் ஒருவனாகி விட்டாய்.

பாய்வது புனித கங்கையல்ல, புழு நெளியும் கழிவு நீரே, அணைப்பது நேசக் கரங்களல்ல நெரித்துக் கொன்றிட வந்த நீசக் கரங்களே, என்ற பின்னர் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக வீறு கொண்டு போராடி நெஞ்சிலே துப்பாக்கிக் குண்டேந்தி விழுப்புண் பெற்று வீரவரலாறு படைத்தாய்!

உன்னை ஈன்றெடுத்த இனிய தாயும் தமிழீழத் தியாகத் தாயான அன்னை பூபதியும் பிறந்த பொன்னாடாம் மீன் நாட்டில் உனது போராட்டச் சுவடுகளைப் பதிப்பதற்கு உன்னுடைய இறுதிக் காலங்களில் நீ விரும்பியிருந்தாய். ஆனால் உன் எண்ணம் ஈடேறவில்லை. எனினும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திலும் தாயகத்திலும்புலிக்கொடி உயரப் பறந்த காலத்திலே தமிழர்களின் உன்னதத்துறைமுகமாக விளங்கிய வரலாற்றுப் பெருமை மிக்க மாதோட்ட மண்ணிலே நீ வீரமரணம் எய்திவிட்டாய். அது உனது ஆன்மாவுக்கும் எங்கள் உள்ளங்களுக்கும் ஆறுதலை அளிக்கட்டும்!

ஊர் உறங்கும் வேளையிலும், ஊரடங்கு வேளையிலும் தாயகத்தின் விடுதலைக்காக எங்கள் தெருக்களிலே தூக்கமின்றித் தாகம் கொண்டு திரிந்த நீ, இன்று மீளாத் துயில் எய்திவிட்டாய்!

சமபலத்துடன் எதிரியைச் சந்தித்து எமது விடுதலையை வென்றெடுக்கும் வேளை அண்மித்து வருகையிலே நீ அமரத்துவம் எய்திவிட்டாய்! அதுவே எங்களின் ஆதங்கம்!

உன்னை என்றும் நேசிக்கும் எங்கள் நெஞ்சங்களே

உனக்கான நினைவுத் தூபிகளாகும்!

உன் நினைவுகளை என்றும் பசுமையுடன் பேணும்

எங்கள் இதயங்களே உனக்கான சித்திரப் பூங்காக்களாகும்!

சித்தப்பா !

நின் சிரித்த முகம் என்றும் நாம் மறந்திடோம்.

நீ வரித்த கொள்கை என்றும் நாம் துறந்திடோம்.

புலோலி மக்கள்

03 - 05 - 1991

(B/2465